# தமிழரசு



16-7-1992 ரூ.1

# விழாக் காலங்களில் விண்மீன் போல் பிரகாசிப்பது... கதர் பட்டுப் புடவைகள்



கதர் பருத்தி ரகங்கள்
ஆயத்த ஆடைகள்
கதர் பாலியஸ்டர்
பாப்டா
மற்றும் உல்லன்

காதிகிராப்ட்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108.



மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஊட்டியில், செல்வி கஸ்தூரி என்ற பெண்ணின் தாயாரின் மருத்துவ சிகிச்சைக்காக தமது சொந்தப் பணத்திலிருந்து ரூ.10,000 நிதி உதவி வழங்கியதோடு, செல்வி கஸ்தூரிக்கு சேரன் போக்குவரத்துக் கழகத்தில் மீண்டும் பணியாற்ற உத்தரவிட்டார்கள் (6.7.1992).

## இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| உதகையில் முதல்வர் | ... | 2 |
| கர்மவீரர் காமராசர் | ... | 5 |
| மாங்கனிக் கண்காட்சி | ... | 8 |
| தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சியும் பண்பாடும் | ... | 9 |
| கால்நடை வளர்ப்போம் மீன்வளம் சேர்ப்போம் | ... | 17 |
| நூல் நயம் | ... | 23 |
| புரட்சித் தலைவியின் முதலாண்டு ஆட்சி - ஒரு கண்ணோட்டம் | ... | 24 |
| நகர் ஊரமைப்பு நலப்பணிகள் | ... | 31 |
| கூட்டுறவுத் துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள் | ... | 33 |
| வனவளம் காப்போம்! | ... | 35 |
| மாணவர் பக்கம் | ... | 39 |
| திருச்சி மாவட்ட ஏழை எளியோர்க்கு மாண்புமிகு முதல்வர் உதவி | ... | 41 |
| அநாதை — கவியரசர் கண்ணதாசன் சிறுகதை | ... | 42 |
| கோவை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் | ... | 46 |



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2023
ஆடித் திங்கள் - 1
மலர்:23
இதழ்:2
16-7-1992

— கடைசிப் பக்க அட்டையில்...



# உதகையில் முதல்வர்

மலர்க் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்காக மே மாதத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஊட்டியின் ரம்மியமான மற்றும் இயற்கை எழிலார்ந்த சூழ்நிலையைப் பேணிக் காக்க வேண்டுமென்றும், ஏற்கெனவே குறைந்து வரும் வனப்பகுதிகள் மேலும் அழிக்கப்படுவதையும், பல மாடிக் கட்டடங்கள் கட்டப்படுவதையும் தடை செய்து, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டுமென்றும், ஊட்டியின் புராதன அழகையும் சோலா காடுகளின் (Shola Forest) தனித்தன்மையைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

ஊட்டிக்கு வரும் எல்லாச் சுற்றுலாப் பயணிகளையும், வயது வித்தியாசமில்லாமல் கவருகின்ற ஊட்டி ஏரியின் அழகைக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற ஆகாயத் தாமரை (Water Hyacinth) என்ற நீர்த் தாவரத்தை முழுமையாக நீக்கி, ஏரியைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றி, ஊட்டியின் பழைய எழிலைக் கொண்டு வரவேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துக்கிணங்க, அரசு அதிகாரிகள் இப்பணியில் ஈடுபட்டு ஆய்வு மேற்கொண்டனர், அந்தச் சீரமைப்புப் பணியின் முதற்கட்டமாக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 3.7.1992 அன்று ஊட்டி ஏரியையும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும், அந்தப் பகுதியில் உள்ள பல்வேறு ஆக்கிரமிப்புகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊட்டியைச் சுற்றியுள்ள வடக்கு ஏரிச் சாலை, மான் பூங்கா, அர்பொரேட்டத்தில் (Arobaratum) உள்ள பாதுகாக்கப்

பட்ட தாவர வகைகள் உள்ள பகுதி, குழந்தைகள் பூங்கா ஆகிய இடங்களில் இறங்கிப் பார்வையிட்டார். மான் பூங்காவில் சில மான்களை வாஞ்சையுடன் தட்டிக்கொடுத்து, அவைகளுக்கு உணவையும் தன் கையால் வழங்கினார். அர் பொரேட்டத்தைப் பார்வையிடும் போது அந்தத் தோட்டம் இன்னும் சிறப்பாகப் பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

குழந்தைகள் பூங்காவுக்கு அருகில் அமைந்துள்ள கழிவு நீர்க் கால்வாய் நீரை இனிமேல் சுத்தப்படுத்திய பின்பு தான் விட வேண்டும் என்ற அறிவுறுத்தினார். ஏரியில் புதிதாக வளர்ந்துள்ள ஆகாயத் தாமரை தாவரத்தை ஜூலை மாதம் இறுதிக்குள் முழுமையாக நீக்கவேண்டும் என்றும், பின்னர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆட்களை நியமனம் செய்து புதிதாக வளரும் நீர்த் தாவரத்தை உடனுக்குடன் களைந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார்.

ஏரியைச் சுற்றி 200 மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளையும், அனுமதியின்றிக்கட்டப்பட்டகட்டடங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். ஏரியைச் சுற்றிப் பசுமையான மரங்களை வளர்த்து, மீண்டும் ஒரு அடர்த்தியான வனப்பகுதியாக அதனை மாற்ற வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

ஏரியின் ஓரத்திலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டுமென்றும், குழந்தைகளுக்கானரயில்செல்லும்பாதையைவிரிவு படுத்தி, அதன் முடிவில் பொம்மை ரயில் நிலையம் ஒன்றையும், சிற்றுண்டிச் சாலையையும் அமைக்கவேண்டுமென்றும்கருத்து தெரிவித்தார். ஏரியின் நடுவில் தற்போதுள்ள மிதக்கும் சிற்றுண்டிச் சாலையை நவீனமயமாக்க வேண்டுமென்றும், ஏரி அசுத்தமாவதைத் தடுப்பதற்கு எல்லாப் படகுகளிலும் ஒரு சிறிய குப்பைத் தொட்டி, அமைக்க வேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தார். ஏரி ஓரத்தில் அமைந்துள்ள படகு வீடு மற்றும் சிற்றுண்டிச்சாலை ஆகிய கட்டடங்களை இயற்கையோடு இணைந்த வனப்பு மிகுந்த கட்டடங்களாக மாற்றி அமைக்கத் திட்டம் மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார். ஏரியைச் சுற்றி அடுக்குத் தளங்கள் (Terracing) நன்முறையில் அமைக்கப்பட்டு ஏரியின் அழகு பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இயந்திரப் படகில் ஊட்டி ஏரியை ஒருமுறை சுற்றி வந்தார். பின்னர், சிறிய ரயிலில் பயணம் செய்து ஏரியின் பல வேறு பகுதிகளையும் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் Cairn Hill-இல் உள்ள சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சி மையத்திற்கு (Eco Awareness Centre)வருகை தந்து வனத் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அருகாமையில் உள்ள 'சோலா காடு'-களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வனத்துறை அதிகாரிகளுடன் சோலா காடுகளைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி ஆலோசனை நடத்தினார். சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்ச்சி மையத்திற்கு வருகை புரிந்ததன் நினைவாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மரக்கன்று ஒன்றை நட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை, அதாவது 3 மணி நேரம் இந்த ஆய்வினை மேற்கொண்டார்.

ஊட்டி ஏரியின் அழகுக்கு ஒரு சவாலாக இருக்கின்ற ஆகாயத் தாமரைத் (Hyacinth) தாவரத்தை எவ்வாறு ஒழிப்பது என்பதைக் குறித்தும், ஏரியின் அழகை மேம்படுத்த மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை எவ்வாறு அகற்றலாம் என்பதைக் குறித்தும், இச்சுற்றுலா இடத்தை

## ஏழைப் பெண்ணுக்கு உதவி!

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் ஊட்டி நகரத்தைச் சார்ந்த செல்வி கஸ்தூரி என்ற 18 வயது பெண், தனது ஏழ்மை நிலையை விளக்கி நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் தனது தாயாருக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க நிதி உதவி செய்ய வேண்டுமென்று 3.7.92 அன்று மனு ஒன்றினைக் கொடுத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவரது ஏழ்மை நிலையையும், பிரச்சினைகளையும் கேட்டறிந்து ஆவன செய்வதாகக் கூறினார்கள். பின்னர் 6.7.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், மனுதாரர் செல்வி கஸ்தூரியை நேரில் வரவழைத்து, தனது சொந்தப் பணத்திலிருந்து அவருடைய தாயாரின் மருத்துவச் செலவுக்காக ரூ.10,000 வழங்கினார்கள். அப்பொழுது மனுதாரர் செல்வி கஸ்தூரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், தான் கடந்த 8 ஆண்டுகளாக சேரன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் கூட்டுறவுப் பண்டக சாலையில் பணிபுரிந்து வந்ததாகவும், தற்பொழுது பணி நீக்கம் செய்யப்பட்டு வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும், முறையிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனுதாரர் செல்வி கஸ்தூரியின் கோரிக்கையை ஆய்வு செய்து, அதே இடத்தில் அவரைப் பணி அமர்த்தத் தக்க மேல் நடவடிக்கையை எடுக்குமாறு உத்தரவிட்டார்கள்.

மேலும் கவர்ச்சிகரமாக்கச் செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், முதலமைச்சரின் செயலாளர் திரு எஸ்.ஆர். கருப்பண்ணன், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கபிலன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனாநாயர், வேளாண்மைப் பொறியியல் துறைத் தலைமைப் பொறியாளர் திரு. கிருஷ்ணசாமி மற்றும் உயர் அதிகாரிகளுடன் பின்னர் ஆலோசனை நடத்தி, மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்தும் அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நீலகிரி மாவட்டம், பைக்காரா நீர்த்தேக்கத்தில் அமைந்திருக்கின்ற படகு குழாமை (Boat Club) 6.7.92 அன்று பார்வையிட்டார்.

இயற்கை அழகுமிக்க அந்தப் பைக்காரா ஏரி கிட்டத்தட்ட 17 கி.மீட்டர் நீளமுள்ளது. அதை விசைப்படகு மூலம் சுற்றிப் பார்த்தார்கள். தற்போது அந்த ஏரி முப்படைகளையும் சேர்ந்த வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற இடமாக அமைந்திருக்கின்றது. இயற்கை எழில் சூழ்ந்த இந்தப் பைக்காரா ஏரிக்குச் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையில் அங்குச் சுற்றுலாப் பயணிகளுக்கெனச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் படகு குழாம் ஒன்றை ஏரியின் ஒரு பகுதியில் அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு சுற்றுலாத் துறைக்கு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் மிக அதிகமான அளவில் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறுவர்.



★ பெண்கள், விழிப்படைந்தால் குடும்பம முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

- பெருந்தலைவர் காமராசர்

சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த இடத்தில் வசதி செய்யும்பொழுது, இயற்கை எழில் மிக்க இந்த ஏரிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமெனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். முப்படை வீரர்கள் பயிற்சி நிலையத்திற்கு இடையூறு இன்றி வனத்துறையினரிடம் கலந்து, வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் படகுக் குழாமிற்கு ஒரு தனி வழி ஒன்று அமைக்கப்படும். ஆனால், அதே சமயத்தில், சுற்றுலாப் பயணிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து, படகு குழாம் செல்ல, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறப்புப் பேருந்துகள் மூலம் மட்டுமே அழைத்துச் செல்லப்படுவார்கள். மற்ற தனியார் வாகனங்கள் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டா. இதன் மூலம் அங்கு உள்ள சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாமல் பாதுகாக்கப்படும். மேலும், அந்தப் பகுதியில் சுற்றுலா மையம் (Tourist Complex) ஒன்று உருவாக்கப்படும். இதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனச் சுற்றுலாத் துறைக்கு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அன்று காலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பைக்காரா நீர்த்தேக்கத்திற்குச் சென்றபோது, வெலிங்டனில் உள்ள ராணுவப் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் ஒய்.கே. வதேரா அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ப. சிவகாமி, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனா நாயர் ஆகியோர் உடன்சென்றார்கள்.



# கர்மவீரர்

# காமராசர்



— முதல் பக்க அட்டையில்...

ஒருவருடைய புகழ், அவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைப் பொறுத்து அமைவ தில்லை; எவ்வளவு பட்டங்களையும் - பதவி களைச் செல்வங்களையும் பொற்றிருந்தார் என்ப வைகளின் அடிப்படையிலும் நிலைத்து நீடிப்ப தில்லை.

குறிப்பிட்ட அந்த நபர், தனது நலத்தில் எவ்வளவு உறுதியாக இருந்தார் - தன் மனைவி மக்களை எவ்வாறெல்லாம் நலமுறச் செய்திருந் தார் - தன்னுடைய உற்றார் உறவினர்களுக் கெல்லாம் எவ்வளவு உதவிகரமாக இருந்தார் என்பதன் அடிப்படையிலும் அன்னாரின் பெருமை விரிந்து பரவி விழுதுவிடுவதில்லை!

வேறு எப்படி இருந்தால்தான் ஒருவரது புகழும் பெருமையும் நீடித்து நிலைக்கும் என்று தானே கேட்கிறீர்கள்?

கர்மவீரர் காமராசரைப் போல இருந்தால் போதும்; உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இடம் பிடித்து விடலாம்!

ஆம்; மேலே நாம் கூறியவற்றுக்கெல்லாம் நேர் மாறாக வாழ்ந்து மறைந்த பெருமையாளர்தான் காமராசர்.

முதுகுத்தண்டு வளைகிறவரை மூத்து முதிர்ந்து நீண்டகாலம் வாழ்ந்தவரில்லை அவர்.

உயர்நிலைப் பள்ளி வரை கூடச் செல்லாத அவர், ஒரு பட்டத்தையும் பெற்றவரில்லை.

மக்கள் கொடுத்த மாபெரும் ஆதரவால், ஒன்பதாண்டுக் காலம் ஒப்பற்ற தமிழக முதல் வராக அவர் பதவி வகித்தார்.

'அன்றாடங் காய்ச்சி' என்பார்களே? அப்படிப் பட்ட மிக வறிய குடும்பத்தில் பிறந்த அவருக்குத் தெரிந்ததெல்லாம் பிறர்நலம் பேணுவது தானே தவிர, தன்னலம் என்றால் துளியும் தெரியாது.

மனை, மனைவி, மக்கள் போன்ற வாழ்க்கைப் பந்தங்களிலெல்லாம் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரில்லை.

முதலமைச்சராக உள்ள தனது மகனிடம் - 'மாதாமாதம் வீட்டுச் செலவுக்கு அனுப்பும் பணத் தில் ஒரு நூறு கூட்டி அனுப்பு' என்று தாயார் விருதுநகரிலிருந்து சொல்லியனுப்ப, 'அந்தக் கிழத்துக்கு இருநூறு போதாதாமா?' என்று அலட் சியமாகவும், குத்தலாகவும் கேட்ட அவர், உற்றார் உறவினர்களாலெல்லாம் வெறுப்போடுதான் நோக்கப்பட்டாரே தவிர, விருப்போடு எதற்காக வும் அணுகப்படவில்லை.

இவ்வாறான தன்மைகளால் தான் காமராசரின் புகழ் கடல் போல் பரவியிருந்ததே தவிர - 1954 முதல் 1963-ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக அவர் வகித்த பதவியினாலோ, எட்டுப்பேர் கொண்ட அவர்தம் அமைச்சரவை யினாலோ அல்லவே அல்ல!

'இளமையில் வறுமை இன்னா' என்ற இன்னா நாற்பது பாடல் அடிகளை அனுபவித்துணர்ந்தவர் அவர். இதனாலேதான், தாம் ஆட்சிப் பொறுப் பேற்ற பின் - ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக் கினார்; உயர்நிலைப் பள்ளிப் படிப்பு உயர்குடிப் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி ஏழை எளிய மக்களுக்கும் இலவசமாகக் கிடைத்திட வைத்தார்; பசிப்பிணி என்னும் பாவி அண்டாதபடி நலிந் தோர் குடும்பத்துப் பிள்ளைகளுக்குப் பகலுணவு அளித்துப் படிப்பில் கவனம் செலுத்தச் செய்தார்.

1930-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாள், விருதுப்பட்டியில் (இன்றைய விருதுநகர்) குமாரசாமி - சிவகாமி ஆகியவர்களின் அருந்தவப் புதல்வனாகப் பிறந்தவர் காமராசர். அப்போது அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் காமாட்சி என்பதாகும்.

இளமை முதலே 'பள்ளிப் படிப்பு புள்ளிக்கு தவாது' என்பது அவர் எண்ணமாக இருந்தது.

கிராமங்கள் மீதும் கிராம மக்கள் மீதும் அவருக்கிருந்த பற்றும் பாசமும் அளவிடற்கரியதாகும்.

அவருடைய பேச்சிலோ எழுத்திலோ, கரடு முரடான தர்பார் வாசகங்களைக் காணவே முடியாது; எல்லோருக்கும் புரியும் எளிய தமிழிலேயே அவர் எழுத்தும் பேச்சும் இருக்கும். பாமர மக்களெல்லாம் அவரைப் பாசமிக்க தலைவராக மதித்திட இதுவும் ஓர் காரணம்.

மிகச் சிறந்த அரசியல் வாதியாக அவர் பிற்காலத்தில் வட இந்தியராலும் மதிக்கப்பட்டார்; இதற்கு முழுமுதல் காரணம், அவர் சிறந்த ராஜதந்திரியாக விளங்கியது மட்டுமல்ல; அரசியலை அநாகரிகத்தின் சாயல்கூடப் படியாமல் கையாண்ட விதம் தான் என்பது கற்றறிவாளர் கருத்தாகும்.

'பெருந்தலைவர்' என்று அவரை நாடு பாராட்டினாலும், தன்னை வெறும் தொண்டனாகக் கருதிப்பாடுபடுவதிலேயே அவா மிகக் கொள்வார் அவர்.

எதிரிகள் தன்னை எரி நெருப்பாகச் சாடினாலும் - பதிலுக்குத் தானும் தரக்குறைவாகப் பேசும் குணம் அவருக்கு இருந்ததில்லை.

'படிக்காத மேதை' என்று பாராட்டப் பெற்ற காமராசரை ஒரு முறை 'பூகோளம் படிக்காதவரா நாடாளுவது'? என்று யாரோ விமர்சித்து விட்டார்கள். இது பற்றித் தன்னிடம் கேட்டவர்களிடம் பெரியவர் காமராசர் என்ன சொன்னார் தெரியுமா?

'எந்த நாடு எங்கே இருக்கு, எந்த ஊரு எங்கே இருக்குங்கிற சங்கதியெல்லாம் எனக்கு நல்லாத் தெரியும். அதுமட்டுமில்லைங்கிறேன். எந்த ஊரு





வழியா எந்த ஊருக்கெல்லாம் போகலாம், அந்தந்த ஊரு ஜனங்களோட மொழி - நாகரிகம் எல்லாம் என்ன? - எந்தெந்த ஊர்ல என்னென்ன ஆறு ஓடுது, அப்பிடிங்கிறதும் எனக்குப் புரியும். இது போதாதா? கோடுகோடா போட்டிருக்கிற படத்தைப் பார்த்துப் படிச்சாத்தான் பூகோளம்னா அது எனக்குத் தேவையில்லைங்கிறேன்'.

- இதுதான் காமராசர் பதில்; எவ்வளவு பொருள் பொதிந்திருக்கிறது பார்த்தீர்களா?

மிக வறிய குடும்பத்திலே பிறந்து, மிக உயர்ந்த நிலையைத் தம் உண்மை உழைப்பாலே அடைந்த காமராசர், தந்தை பெரியார் அவர்களால் 'பச்சைத் தமிழர்' என்று கூறிப் பாராட்டப் பெற்றார். மூதறிஞர் ராஜாஜி, அறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர்., ஆகியோரும் அவரைப் பலபடப் போற்றிப் புகழ்ந்ததுண்டு.

விடுதலைப் போராட்ட வீரர் சத்தியமூர்த்தியின் நம்பிக்கைக்கு உரியவரான அவர் இந்திய விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்றுச் சிறை சென்றதுண்டு; தியாகத் தழும்புகளை ஏற்றதுண்டு. படிப்படியான அவரது அரசியல் முன்னேற்றம் இவ்வாறாகப் பலத்த அஸ்திவாரம் உடையதாக இருந்தது.

இந்தியப் பிரதமர் பதவி வகித்த காலத்தில் - ஜவகர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி ஆகியோர் எதிர்பாராமல் மறைந்தபோது, இந்தியாவில் எவ்வித அரசியல் நெருக்கடியும் நேராதிருக்கக் காரணமே காமராசரின் அரசியல் சாமர்த்தியம் தான்' என்று உலகமே உவந்து பாராட்டியதுண்டு.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும், சோவியத் நாட்டுக்கும் சென்றபோதும் சாதாரண வேட்டி-சட்டையிலேயே சென்றவர் காமராசர்; அது மட்டுமல்ல; பிறமொழி தெரிந்திருந்தும் தமிழில் தான் பேசுவேன் என்றும் பிடிவாதமாகக் கூறி விட்டார்.

அந்த அளவுக்குத் தாய்மொழிப் பற்றாளராக இருந்த அவரைத் தமிழிலக்கியத்தின் எதிரி என்றார்கள் சிலர்; ஆனால் அந்தப் பொய்வாதம் மெய்யாகவில்லை.

புதுவையில் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் இல்லத்தில், திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை முதன் முதல் திறந்து வைத்தபோது தமிழக முதல்வராக இருந்த காமராசர் என்ன பேசினார் தெரியுமா?

'நான் தமிழைப் பற்றியோ தமிழிலக்கியங்களைப் பற்றியோ அவ்வளவாக அறியாதவன் தான்; ஆனால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்ப் புலவர்; தமிழ் இலக்கண இலக்கியத்திலெல்லாம் நல்ல தேர்ச்சி பெற்றவர்; அவர் சொல்கிறார் திருவள்ளுவர் இப்படித்தான் இருந்திருப்பார் என்று. ஆகவே, இதை நான் ஒத்துக் கொள்கிறேன்.''

- என்று மனம் திறந்து கருத்தறிவித்தார் அவர். அந்தத் திருவள்ளுவரின் படம்தான் பின்னர் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

1972-இல் தாமிரப்பத்திர விருதும் பெற்ற கர்மவீரர் காமராசர் பெரிதும் உடல் நலிவுற்றிருந்தார். காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் (1975) மறைந்தார். தன்னிகரற்ற அந்தத் தியாகத் தலைவனின் மறைவுச் செய்தி தமிழகத்தையே உலுக்கிவிட்டது எனலாம்.

மத்திய அரசு காமராசர் அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது. சென்னை மாநகரிலே அவரது நினைவாகத் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது; தமிழ்நாடு அரசு - விருது நகரிலும், சென்னையிலும் உள்ள காமராசர் இல்லங்களை நினைவில்லங்கள் ஆக்கியது. மெரீனா கடற்கரைச் சாலை காமராசர் சாலை ஆக்கப்பட்டது. 'காமராசர் மாவட்டம்' உருவாகியது; 'காமராசர் பல்கலைக் கழகம்' அமைக்கப்பட்டது. உழைப்பால் உயர்ந்த அவர் புகழ், தமிழ்போல் தழைத்திடும் என்றென்றும்.

- பி.எல். ராஜேந்திரன்.

# மனங்கவரும்
# மாங்கனிக் கண்காட்சி

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின் படியும் அதைத் தொடர்ந்து அவர்களது ஆணையின்படியும் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் 5.6.92 முதல் 9.6.92 முடிய அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கண்காட்சியின் தொடக்க விழா 5.6.92 அன்று கிருஷ்ணகிரி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளித் திடலில் நடந்தது. இவ்விழாவில் தோட்டக்கலைத்துறை இயக்குநர் திரு. ஆர். ஸ்ரீராம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஏ. தசரதன் இ.ஆ.ப. அவர்கள் விளக்கவுரை ஆற்றினார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையேற்றுச் சிறப்பு மலர் வெளியிட்டுத் தலைமையுரையாற்றினார். மேலும் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள், மாங்கனிக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசினார்.

இவ்விழாவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் திரு. ஜி. ரங்கராவ் இ.ஆ.ப. அவர்களும், செய்தி சுற்றுலாத்துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப. அவர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். மேலும் கண்காட்சி விழா நிகழ்ச்சிகளில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. முனிவெங்கடப்பன், திரு. கே.பி. முனுசாமி, திரு. கே. சிங்காரம், திரு. எம்.ஜி. சேகர், டாக்டர் வி. புருஷோத்தமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். தோட்டக்கலை இணை இயக்குநர் திரு. எம்.ஏ. இரியன் நன்றியுரையாற்றினார்.

இக்கண்காட்சியில் தமிழகம் மட்டுமன்றி மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரம், பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து 50-க்கும் மேற்பட்ட மாங்கனி இரகங்கள் கொண்டுவரப் பட்டன. இக்கண்காட்சியில், 300-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டு மாங்கனி மட்டுமன்றி இதர பழங்கள், காய்கறிகள், வாசனைத் திரவியங்கள், மலைப் பழங்கள், மலர்கள் ஆகியவைகளையும் இக்கண்காட்சியில் போட்டிக்கு வைத்தனர். மேலும், இக்கண்காட்சியில் சிறந்த மாங்கனிக்குப் பரிசும் அதிக அளவு சிறந்த மா இரகங்களை வைத்துப் பரிசுகளைப் பெறுபவர்களுக்குக் கேடயமும் வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியில் 75 அரசுத் துறை அரங்குகளும் 42 தனியார் அரங்கங்களும் இடம் பெற்றன. அரசுத் துறையினர் தத்தம் துறையின் மூலம், அரசு மக்களுக்கு ஆற்றிவரும் நற்பணிகள் திட்டங்கள், பற்றி மக்கள் எளிதில் தெரிந்துகொள்ளும் வகையில் அரங்கம் அமைத்திருந்தனர்.

இவ்விழாவின் ஒவ்வொரு நாளும் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் மா சாகுபடிக் கருத்தரங்கு, பட்டுச் சாகுபடிக் கருத்தரங்கு, சொட்டுநீர்ப் பாசனக் கருத்தரங்கு போன்ற கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றியும் நவீன முறைகள் பற்றியும் சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள், உயர் அலுவலர்கள் மூலம் அறிந்திட இக் கண்காட்சியும், கருத்தரங்குகளும் மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தன.

**மு. கிருஷ்ணன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**தருமபுரி**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 10.7.1992 அன்று ஊட்டியில் உள்ள 'தமிழகம்' அரசு விருந்தினர் மாளிகையில், சமூகநலத் துறை சார்பில், நலிவுற்ற பெண்களுக்குத் தையல் இயந்திரங்களையும், தம் சொந்தப் பொறுப்பில் சேலை, ரவிக்கை ஆகியவை களையும் வழங்கினார்.**



தழைத்தோங்கும்

# தமிழ்வளர்ச்சியும் பண்பாடும்



**மா**ண்புமிகு முதலமைச்சரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சில திங்களில் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையையும் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்கள். அன்று முதல் தமிழ் வளர்ச்சிக்குப் புதுப்பொலிவும் மெருகும் மிளிரலாயின. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உள்துறை, தொழில் துறை முதலிய பெரிய துறைகளுக்குக் காட்டும் ஆர்வத்தைப்போலத் தமிழ் வளர்ச்சியிலும் பரிவு காட்டியதோடு கலை வளர்ச்சியும், தமிழ் வளர்ச்சியும் நாட்டில் மலரும் பல்வேறு வளர்ச்சிகளுக்கு வேராக அமையும் துறையாகக் கருதியதை நன்றியோடு நாம் நினைவுகூர்கிறோம். கலை வளர்ச்சிக்குப் புதிய பொலிவும் தமிழ் வளர்ச்சிக்குப் புதிய வலிவும் பெருகுவதற்கான பல முயற்சிகள் இந்த அரசின் ஓராண்டுச் சாதனைகளாக உருவாகியுள்ளன.

**''தழைத்தோங்கும் தமிழ் வளர்ச்சியும் பண்பாடும்''**

அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சிமொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு, மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்த தமிழ் மொழி வழக்கை விரிவான முறையில் ஆட்சியிலும், அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்தல், கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு அளாவிய துறைகளும், பிரிவுகளும் ஓர் அமைப்பாக அரசு செயலகத்தில 1984-ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தோற்றுவிக்கப் பெற்றது.

இத்துறையின் பொறுப்பில் அமைநத அமைப்புகளும், நிறுவனங்களும் தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப் பட்டுச் செயலாற்றுகின்றன. தமிழ் வளர்ச்சியும், பண்பாட்டு மலர்ச்சியும் நாள்தோறும் மிக்கோங்கிச் சிறப்பெய்தி வருகின்றன.

**தமிழ் வளர்ச்சித் துறை**

ஆட்சி மொழித்திட்டச் செயலாக்கத்தில் அமைந்த முன்னேற்றம் குறித்து, துறைத் தலைமை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலமைந்த சார்நிலை அலுவலகங்களை மாவட்ட உதவி இயக்குநர்களும், தமிழாய்வு அலுவலர்களும் ஆய்வு செய்துள்ளனர்.

ஆட்சி மொழி திட்டச் செயலாக்கத்தைத் தன்னாட்சி நிறுவனங்களுக்கு விரிவுபடுத்தும் வகையில் அரசுக்குக் கூடுதல் செலவில்லாமல் இப்போதுள்ள அலுவலர்களைக் கொண்டே ஆட்சி மொழித் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்ற ''ஈராண்டு எழுச்சித் திட்டத்தை'' மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி தமிழகத்தில் அனைத்துத் தன்னாட்சி நிறுவனங்களிலும் அரசு அலுவலகங்களிலும் ஆட்சிமொழித் திட்டம் முனைப்புடன் செயற்படுத்தப் படும்.

**ஆட்சிச் சொல்லகராதி**

அரசுப் பணியாளர்கள் இடர்ப்பாடின்றி எளிதில் தமிழைப் பயன்படுத்துவதற்கியலும் பொருட்டு முன்னர் வெளியிடப் பெற்ற ஆட்சிச் சொல்லகராதியின் நான்காம் பதிப்பின் மறுபதிப்பு இவ்வாண்டில் அச்சிட்டுப் பல்வேறு துறைகளுக்குத் தேவைக்கேற்ப வழங்கப் பெற்றது. ஆட்சிச் சொல்லகராதியின் ஐந்தாம் பதிப்பிற்கும், ஆட்சிச் சொல்லகராதியின் இணைப்பு வெளியீட்டிற்கும் புதிய சொற்கள் தொகுக்கப் பெறுகின்றன.

**ஆட்சிமொழிக் கருத்தரங்கு**

அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்புடன் ஆட்சிமொழித் திட்டத்தைச் செம்மையாக நிறைவேற்றுவதற்கு வகை செய்யும் முறையில் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகளைத் திட்டமிட்டு துறை நடத்தி வருகிறது. திட்டமிடப்பெற்றவாறு நீலகிரி, தென் ஆர்க்காடு, சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இக்கருத்தரங்குகள் நடத்தப் பெற்றன. திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் கருத்தரங்கை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**தமிழிற் சிறந்த வரைவுகள்-குறிப்புகள் - பரிசு வழங்கல்**

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழிற் சிறந்த வரைவுகள் எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு திருத்தியமைத்து, ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள் தோறும் 5 பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவு

களுக்குப் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன.

மாணவர்கள் தமிழ் மொழியின் பால் காட்டும் ஈடுபாட்டினை ஊக்குவிக்கக் கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கென ரூ.75,000/- நிதியுதவி வழங்க அரசு இவ்வாண்டில் ஆணையிட்டது. 28 கல்லூரித் தமிழ் மன்றங்களுக்கு ரூ.53,500 நிதியுதவியாக வழங்கப் பெற்றது.

**மொழியாக்க நூல் வெளியீடு**

தமிழிற் சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளில் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் வெளியிட இத்திட்டம் வகை செய்கின்றது. இத் திட்டத்தின்படி இதுவரை 13 நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இம்மொழி பெயர்ப்புத் திட்டத்தின்படி கம்பராமாய ணத்தின் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம் ஆகியன ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இவ் வாண்டில் வெளியிடப்பட்டுள்ளன.



**தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கு திட்டம்**

கடந்த ஆண்டில் வெளிவந்த நூல் களில் 42 சிறந்த நூல்களுக்குப் பரிசாக ரூ.1.27 இலட்சம் ''திருவள்ளுவர் திருநாளில்'' வழங்கப்பட்டது.

**நூற்பதிப்பு நிதியுதவி வழங்கு திட்டம்**

இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் 34 நூலாசிரியர்களுக்கு முதல் இரண்டாம் தவணையாக ரூ.96,670 நிதியுதவி வழங்கப் பெற்றது.

**தமிழிருக்கை நிறுவுகை - ஆராய்ச்சிப் பணிகள் - பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் பட்டய வகுப்பு நடத்துதல் - நிதியுதவித் திட்டம்:**

பிற மாநிலங்களில் தமிழ் வளர்க்கும் நோக்கில், அரசு நிதியுதவி வழங்குகிறது. இவ்வாண்டில் இத்திட்டத்தின்படி ரூ.37,56,627 மானியமாக பிற மாநிலங் களுக்கு வழங்கப் பெற்றது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கு திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 360 தமிழறிஞர்கள் நிதியுதவி ஒப்பளிக்கப் பெற்றுள்ளனர். ஒவ்வொருவரும் திங்கள் தோறும் ரூ.400 நிதியுதவி பெறுகின் றனர். இவ்வாண்டில் 20 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கப் பெற்றது.

**வரலாற்று வரைவுத் திட்டம்**

முறையான தமிழ்நாட்டு வரலாற்றை ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல்பழங்காலம், சங்க காலம் பகுதி 1 (அரசியல்) சங்ககாலம் பகுதி 2 (வாழ்வியல்) பல்லவர், பாண்டியர் காலம் (முதற் பகுதி) ஆகிய மூன்று தொகுதிகள் வெளி யிடப்பட்டுள்ளன. இவ்வாண்டில் பல்லவர் பாண்டியர் காலம் - தொகுதி 3-இல் இரண்டாம் பகுதியும், சோழப் பெருவேந்தர் காலம் பற்றிய நான்காம் தொகுதியினையும் வெளியிட விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று, தரவுகள் தொகுப்புப் பணி நிறைவடைந் துள்ளது.

**விழாக்களும், விருதுகளும்:**
**திருவள்ளுவர் திருநாள் விழா**

திருவள்ளுவர் திருநாளை அரசு விழா வாகத் தமிழ் வளர்ச்சித் துறை நிகழ்த்து கிறது. ஆண்டுதோறும் திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் எழுதும் சிறந்த அறிஞர்களுக்குத் திருவள்ளுவர் விருது

வழங்கப் பெறுகிறது. இவ்விருதுக்குத் தெரிவு செய்யப் பெறுபவர் ரூ.20,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் வழங்கப் பெறுகின்றார். இவ்வாண்டு சனவரித் திங்கள் 15-ஆம் நாளில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப் பெற்றது.



**திரு.வி.க. விருது**

தெரிவு செய்யப்பெறும் நாடறிந்த எழுத்தாளருக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. விருதாளருக்கு ரூ.10,000 கொண்ட பொற்கிழியும், நினைவுப் பரிசும் அளிக்கப் பெறுகின்றன. 'பெண்ணின் பெருமை' என்னும் பேரிலக்கியம் தந்த திரு.வி.க. பெயரிலமைந்த இவ்விருது, இவ்வாண்டு முதன் முதலாகப் பெண் எழுத்தாளரும், நாடறிந்த கதையாசிரியருமாகிய திருமதி இராஜம்கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப் பெற்றது.

**பாவேந்தர் விருது**

ஆண்டுதோறும் வழங்கப்பெறும் பாவேந்தர் விருது, கவிஞர் இ. முத்துராமலிங்கம் அவர்களுக்கு முதலமைச்சரால் வழங்கப் பெறவுள்ளது.

**கம்பர் விழா**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் திருவழுந்தூரில் ஆண்டுதோறும் கம்பர் விழா அரசு விழாவாக நடத்தப் பெறுகிறது. இவ்வாண்டு 22.3.92-இல் திருவழுந்தூரில் கம்பர் விழா மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றது. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாதய்யர் பிறந்தநாள் விழாவும், விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு விழாவும் சிறப்புற நடத்தப்பெற்றன.

சங்கப் புலவர்களின் பெருமைகளைப் போற்றிப் பரப்பும் வண்ணம் நினைவுத் தூண் நிறுவும் திட்டம் தோற்றுவிக்கப் பட்டது. சங்கப் புலவர்கள் வாழ்ந்த இடங்கள் என அறியப்படும் முதன்மையான இடங்களில் அரசின் சார்பில் நினைவுத் தூண்கள் நிறுவப்பெறும். இவ்வாண்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் உள்ள ஒக்கூரில் மாசாத்தியார்-மாசாத்தனார் நினைவுத் தூண் அமைக்கப் பெற்று 10.12.1991-இல் திறப்புவிழா நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் கருவூரில் கருவூர்ப் புலவர்கள் பன்னிருவர்க்கும் நினைவுத் தூண் நிறுவப்பட்டு 11.5.1992-இல் திறப்பு விழா நடைபெற்றது. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் இடைகழிநாட்டு நல்லூரில், நல்லூர் நத்தத்தனார்க்கும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாங்குடியில் மாங்குடி மருதனார்க்கும் நினைவுத்தூண்கள் நிறுவும் பணிகள் முடிவடைந்துள்ளன. விரைவில் திறப்பு விழாக்கள் நடைபெறவுள்ளன.

**திருக்குறள் வகுப்பு**

வள்ளுவர் கோட்டத்தில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலையில் திருக்குறள் வகுப்பு நடத்தப் பெறுகிறது. நாள்தோறும் மாலை இருவேளைகளிலும் வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் பாடலிசையும் நிகழ்கிறது.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

வளர்தமிழ்ப் பணியை உலகளாவிய நிலையில் வளப்படுத்தும் நோக்கில் அமைந்த இந்நிறுவனத்தில் திங்கள், வாரக் கருத்தரங்குகள் நடத்தப் பெறுகின்றன. அறிஞர்களும், ஆய்வாளர்களும் கட்டுரையளிக்கும் கருத்தரங்கேற்றமாக நிகழ்வுகள் திகழ்கின்றன. இவ்வாண்டில் தமிழும் பிற துறைகளும், தகவல் பண்பாட்டு நோக்கில் தமிழ்த் திரைப்படம், நாட்டுப்புறத் தெய்வங்கள் விழாக்கள், சடங்குகள், தமிழ் நாளிதழ்களின் தமிழ்ப்பணி ஆகிய பொருண்மைகளில் கருத்தரங்குகள் நிகழ்த்தப் பெற்றன. தமிழர் சமூக மரபுச் செல்வம் என்னும் தேசியக் கருத்தரங்கம் இவ்வாண்டில் நடத்தப் பெற்றது.



**★ ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சியிலும் நாட்டின் ஒருங்கிணைந்த நலன் உறைந்து கிடக்கிறது; அதேபோல், பல்வேறு மாநிலங்களின் வளர்ச்சிதான் பரந்துபட்ட இந்தியாவின் உயர்வுக்கு ஊக்கமளிக்கும் என்பதையும் நாம் உணர வேண்டும்.**

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை ஆந்திரத்தில் திருப்பதியிலும், கருநாடகத்தில் பெங்களூரிலும், கேரளத்தில் திருவனந்தபுரத்திலும் தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து இந்நிறுவனம் சிறப்பாக நடத்தியதன் தொடர்பாக, பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவில் பாவேந்தரின் 100 பாடல்கள் தெரிவு செய்யப்பட்டு கன்னடம், மலையாளம், தெலுங்கு மொழிகளில் மொழியாக்கம் செய்து நூலக வெளியிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. உயராய்வு நிலையில் மதிக்கப் பெறும் பதிப்பு நூல்கள், ஆய்வு நூல்கள், உரை நூல்கள் அறக்கட்டளைப் பொழிவுகள் என்ற வகையிலும் இவ்வாண்டில் எட்டு நூல்கள் வெளியிடப் பெற்றன. அறிவியற் பெருந்தகை பெ.நா. அப்புசாமி அவர்களின் நூற்றாண்டு விழாவை இந்நிறுவனம் இவ்வாண்டில் நிகழ்த்தியது.

19-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு (ஆங்கிலம்) தமிழர் சமூகவியல், தமிழ் அறிமுக நிலை, சென்னை நகரக் கிளை மொழிகள் ஆய்வு, 18-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழரல்லாதவர்க்கான எளிய இலக்கணம், அழகியல் தமிழ் வேற்றுமையுருபுகளும் ஆங்கில முன்னொட்டுகளும், பெருந்தகை பெ.நா. அப்புசாமி நூற்றொகை, கணினியின் உதவியால் சொல்லடைவு தயாரித்தல் போன்ற திட்டப் பணிகளுக்கான தரவுகள் திரட்டப்

பெற்று, பணிகள் வளர்நிலையில் உள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வலுவூட்டுதற்கு, உயர்நிலைக் குழு ஒன்றை அமைக்கவும், இந்நிறுவனத்திற்கு யுனெஸ்கோ நிதியுதவி பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன.

**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்**

மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரால் தனி வகையில் ஆய்ந்து தொகுக்கப் பெற்ற அகரத்தில் தொடங்கும் 6,500 சொற்கள் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதல் மடலம் 1985-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தனி இயக்ககமாக 1989-இல் மீளவும் தோற்றுவிக்கப்பட்டு இயங்குகிறது. பேரகரமுதலி முழுமைக்கும் தேவையான 60,000 சொற்கள் சொல்லடைவு செய்யப்பட்டுள்ளன. 'ஆ' முதல் 'ஔ' முடிவுள்ள இரு பகுதிகளை அச்சிடும் பணி இவ்வாண்டில் தொடங்கப் பெற்றுள்ளது.

**தொல்பொருள் ஆய்வு இயக்ககம்**

தொல்பொருள் ஆய்வுத்துறை 1961-இல் தோற்றுவிக்கப் பெற்றது. தமிழகத்தில் 66 வரலாற்று நினைவிடங்கள் தொல்பொருள் ஆய்வுத் துறையால் தெரிவு செய்யப் பெற்றுக் காக்கப் பெறுகின்றன.

**கல்வெட்டுப் பிரிவு**

கல்வெட்டாய்வாளர்கள் ஆங்காங்கே ஊர்ப் புறங்களுக்குச் சென்று பழங் கோயில்கள், மண்டபங்கள் முதலிய இடங்களில் விரிவான ஆய்வு நடத்தியதில் 7,550 கல்வெட்டுக்கள் கண்டறிந்து படிக்கப் பெற்றன. சுமார் 2,000 கல்வெட்டுக்கள் பல்வேறு தொகுதிகளாக அச்சிடப் பெற்றுள்ளன. இப்பணியை மேலும் விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆழ்கடல் அகழாய்வு**

தமிழ்நாட்டு அரசின் பெருமுயற்சியால் ஆழ்கடல் தொல்பொருளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொல்பொருள் துறையும், கோவா தேசியக் கடலாய்வு மையமும் இணைந்து பூம்புகார் கடற்பகுதியில் ஆய்வுகள் நிகழ்த்தின. ஆய்வின் விளைவாகத் தரை தட்டிய கப்பல் ஒன்றும் சில கட்டடப் பகுதிகளும் கடலடியில் 22 மீட்டர் ஆழத்தில் கண்டறியப் பெற்றன. கடற்கரையை ஒட்டிக் காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் சில சிதைந்த பழங் கட்டடப் பகுதிகளும், கடற்கரையிலிருந்து சுமார் 4½ கி.மீட்டர் தொலைவில் கடலடியில் ஒரு கட்டடப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் முழு விவரங்கள் மேலும் ஆய்வில் உள்ளன. தரை தட்டிய கப்பலில் இரும்பு வளையமும், சில ஈயத் துண்டுகளும் காணப்படுகின்றன. இந்த ஈயத் துண்டில் ஒருபுறம் 1792 என்றும் எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இக்கப்பல் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தரை தட்டிய கப்பலாகலாம் என்று உணர முடிகிறது.

வரலாற்றுத் தொன்மையை வரம்பிட்டு அறியவும், இலக்கியக் குறிப்புகளை உறுதி செய்து தெளியவும் முற்படும் இவ்வரிய ஆழ்கடல் அகழாய்வு நெடுங்காலப் பணியாகவும் நினைத்து நினைத்து உறுதி கண்டுபிடிக்க வேண்டிய நிலைப் பணியாகவும் மலைப்பை உண்டாக்குகிறது. முன்னரே சிலமுறை முயன்று நின்று போன இப்பணியில் தனியார்வம் காட்டி இவ்வரசு ஊக்கியுள்ளது. பூம்புகார்ப் பகுதி கடலடியில் மறைந்தது போலவே இப்போது மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதியின் கீழும் தரங்கம்பாடி வரையிலும் நிலப்பரப்பு புதைந்திருக்கலாம் என்றெல்லாம் புதிய ஊகங்களும் இப்போது கருத்துக்கு விருந்தாயமைந்துள்ளன. அவ்வகையில் கடலாய்வுத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். ரூ.157 இலட்சத் திட்ட மதிப்பீட்டில் செயற்படும் இக்கடலாய்விற்கு, கடந்த ஆண்டில் ரூ.10 இலட்சமும், இவ்வாண்டில் ரூ.10 இலட்சமும், ஒதுக்கீடு செய்யப்பெற்றது.

இவ்வாண்டில் முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும் (ஓராண்டுக் காலம்)

## மிதிவண்டியில் நிதி!

பார்வை அற்றோரிடம் அனுதாபம் ஏற்படுவது இயற்கை. ஆனால் வெறும் அனுதாபத்தினால் என்ன பயன்?

இதை உணர்ந்துதானோ என்னவோ, மஹாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த ஏழு வயது சிறுவன் சனில் சாஸ்திரி, தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்ய முன்வந்துள்ளான். அதுவும் கூட சாதாரண உதவியல்ல, சாதனையுடன் கூடிய உதவி.

நாட்டின் தலைநகரான புது தில்லியிலிருந்து மஹாராஷ்டிர மாநிலத் தலைநகரான பம்பாய் வரை சைக்கிளில் பயணம் செய்து பார்வையற்றோர் சங்கத்திற்காக நிதி திரட்ட இருக்கிறான் இச்சிறுவன்.



இரு நகரங்களுக்கும் இடைப்பட்ட தொலைவோ 1,400 கி.மீ.

ஜூன் முதல் தேதியன்று புது தில்லியில் உள்ள விஜய் சவுக் (வெற்றிச் சதுக்கம்) என்ற பொருத்தமான பெயர் கொண்ட இடத்திலிருந்து சனில் சாஸ்திரி தனது சைக்கிள் பயணத்தை ஆரம்பித்தான். இந்திய விமானப் படைத் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் என்.சி.சூரி, சிறுவன் சனிலை அன்போடு அள்ளியெடுத்து வாழ்த்தி, சைக்கிள் பயணத்தை துவக்கி வைத்தார்.

மிதிவண்டியில் நிதி திரட்டப் புறப்பட்டுள்ள சனிலின் உருவம் சிறிதானாலும் உள்ளம் பெரிதல்லவா!

கோடைக் காலப் பயிற்சியும் (மூன்று வாரம்) நடத்தப் பெற்றன. ஓராண்டுப் படிப்பில் முதுகலை பயின்ற மாணவர்களும், கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியில், பள்ளி, கல்லூரி ஆசிரியர்களும் பயின்றனர்.

கல்வெட்டாய்வாளர் பயிற்சியில் பங்குபெறுவதற்குத் தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு வழங்கலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, இக்கல்வெட்டுப் பயிலகத்தில் இப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பெற்றது.

வரலாற்று வல்லுநர்கள் பலரும் கலந்துகொண்டு கருத்துரைக்கும் வகையில் 16.5.92-இல் கருவூர் வரலாற்றுக் கருத்தரங்கு தொல்பொருள் ஆய்வுத்துறையால் நடத்தப்பெற்றது.

**அறிவாராய்ச்சிக்குத் தகைமை விருது!**

ஜவகர்லால் நேரு தகைமையாளர் நிதியுதவித் திட்டம் போலவே தொல்பொருளியல், மானுடவியல் போன்ற தொன்மைப் பொருண்மைகளில் ஆய்வு செய்வோர்க்கு நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முதன்முதலாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆராய்ச்சியாளருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதோடு அறிவாராய்ச்சிக்கு அரசளிக்கும் பரிசாகவும் அமைகிறது.

**சிறப்புமிக்க கண்டுபிடிப்புகள்**

பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்கள், நடுகற்கள், மதகுக் கல்வெட்டுக்கள் கற்சிற்பங்கள், சுடுமண் பொம்மைகள் என முப்பத்தைந்து தொன்மங்கள் கண்டெடுக்கப் பெற்றன.

**சிறப்புக் கண்காட்சி**

அழகன்குளத்தில் அகழ்ந்தெடுக்கப் பெற்ற பொருட்களைப் பொதுமக்கள் பார்வையிடச் சிறப்புக் கண்காட்சி அமைக்கப் பெற்றது.

**அகழ்வைப்பகங்கள்**

ஆறு அகழ்பொருள் வைப்பகங்களில் காட்சிப் பேழைகள், குறிப்பு அட்டைகள், சிற்பங்கள் முதலியன பொதுமக்கள், பள்ளிக் குழந்தைகள் காண்பதற்கேற்ப பலவேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. பதினைந்து வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற தொல்பொருட்கள் பொதுமக்கள் எளிதில் காணும் வகையில் அகழ்வைப்பகங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. இந்திய மாநிலங்களுள் நெடும் பழமை வாய்ந்த பகுதிகள் சிலவும் தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வகையில் பழந்தரைப் பகுதியாகக் கருதப்படும் பூண்டியில் தொல்மனை நினைவகம் ஒன்றை உருவாக்க அரசு கருதியுள்ளது.

**அரசு அருங்காட்சியகத் துறை**

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும், பெருமையும் பூண்டது சென்னை அருங்காட்சியகமாகும். தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், கலையியல், சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக் கூடங்களோடு பழங்கலைப் பொருள்களைத் திரட்டுவதிலும் இவ்வருங்காட்சியகம் புகழ்பெற்றுத் திகழ்கிறது. தேசிய மரபுச் செல்வங்களைக் காக்கும் கலைக் களஞ்சியமாக இக்காட்சியகம் அமைந்துள்ளதோடு தொல்பழங்காலப் பொருள்களையும் பேணிக் காக்கிறது. பலவேறு மாநில மக்களும் ஆர்வத்தோடு திரண்டுவந்து காணும் காட்சியகமாகவும் இவ்வருங்காட்சியகம் அமைந்துள்ளது. இந்திய அருங்காட்சியகங்களுள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்த பெருமை அருங்காட்சியகத்திற்குரியது.

**மாவட்ட அருங்காட்சியகங்கள்**

மாவட்டத் தலைநகரங்களில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும் என்ற அரசு கொள்கையின்படி 1979-ஆம் ஆண்டிலிருந்து சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், உதகமண்டலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்த 'அருங்காட்சியகக் கலையரங்கு' இவ்வாண்டில் காண்போர் களிப்புறும் வண்ணம் தண்வளி அரங்காக அமைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

**சிறுவர் அருங்காட்சியகம்**

அருங்காட்சியக வளாகத்தில் அமைந்த சிறுவர் அருங்காட்சியகம் வரலாற்று மாட்சி, வளப்புமிகு பொம்மைக் காட்சிகள் இயற்கை எழில், இயற்பியல், அறிவியல் புதுமைகள்தொடர்பான கூடங்களைக் கொண்டதாகும். கலை இயற்கை




**மாண்புமிகு முதல்வர் அவர்களால்- தமிழகத்தில்- சென்னை மாநகரில்- பெண் போலீசாரே பணியாற்றும் மகளிர் காவல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது; மங்கையர் சங்கடம் நீக்கும் இவ்வாறான காவல் நிலையங்கள், விரைவில் தமிழகமெங்கும் அமைக்கப்படும்.**




யியல் தொடர்புடைய பொருண்மை களைப் பற்றிச் சிறுவர்கள் அறிந்து கொள்ளச் செயல்முறை வடிவுகள் அமைக் கப்பட்டுள்ளன. சிறுவர்கள் தாமே இயக்கி அறியும் வண்ணம் மின்னணு விளையாட்டுக் கருவி, சுழலாடி வழியாக மின் ஆக்கம், வளிமத் தந்திக் கருவிகள் முதலியன சிறுவர் அருங்காட்சியகத்தில் நிறுவப்பட்டுள்ளன. தொல் பழங் காலத்தே இருந்த மறைந்த பெருவிலங் கின இழைம வடிவங்கள், காட்சியக முகப்பு வெளியில் நிறுவப்பட்டுள்ளன.

**கூடங்கள் சீரமைப்புப் பணி**

நாற்புறமும் காணும் வகையில் திருத்திய படிமங்களைச் சீரமைக்கும் முதற் கட்டப் பணி முடிந்து இரண்டாம் நிலைப் பணி நடந்து வருகின்றது. பாலூட்டிகள் கூடத்தை மாற்றியமைக்கும் பணியும் முடிக்கப்பட்டது. எதிர்வரும் ஆண்டுகளில் பிற காட்சியகங்களை மறுசீரமைப்புச் செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளது. கூடமும் புதுப்பிக்கப்பட்டுப் பணிகள் நிறைவடைந்தன.

கலை-பண்பாட்டு இயக்கத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அருங்காட்சியகத்தால் அமைக்கப் பெற்ற 'தென்னகக் கலைப் படிமக் கண் காட்சியை'யும் பல்லவபுரம் ஊரமைவுத் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்கள். அருங்காட்சியக மலர் ஒன்றும், தொன்மக் கலைப் படிமங்களைப் பற்றிய ஐந்து பழம்பெரும் நூல்களும் (மறுபதிப்பு) அருங்காட்சி இயக்ககத் துறையால் வெளி யிடப்பட்டுள்ளன.

**கலை பண்பாட்டு இயக்ககம்**

கலை வளம் பொலிந்த நம் தமிழகத் தில் தனியார் அமைப்புகளுடன் அரசின் பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் இணைந்து கலைப் பணிகளை ஆற்று கின்றன. தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, ஜவகர் சிறுவர் இல்லம், சென்னை யிலும் மதுரையிலும் இயங்கும் தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையங்கள், சென்னையிலும், குடந்தையிலும் இயங் கும் அரசு ஓவியக் கைவினைத் தொழிற் கல்லூரிகள், மாமல்லையின் கட்டடச் சிற்பக் கல்லூரி ஆகியன கலைப் பணி களுக்குரிய ஆக்கமும் ஊக்கமும் வழங்கு கின்றன. கலை பண்பாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கும் இவ்வமைப்புகளை ஒருங் கிணைத்துப் புதிய இயக்ககத்தைத் தோற்று விக்க வேண்டுமென அரசு திட்டமிட்டது. அதன்படி கலை பண்பாட்டு இயக்ககம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர் களால் முத்தமிழ்க் கலைவிழா நிகழ்ச்சி யோடு தொடங்கி வைக்கப் பெற்றது. தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இளங்கலைஞர்களை ஊக்கு விக்கும் வகையிலும், எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கம் புகழுடன் பொலியவும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால், கலை பண்பாட்டைக் கவினார்ந்த முறை யில் வளர்க்கத் தொடங்கி வைக்கப் பெற்ற இவ்வியக்ககம், முத்தமிழ்க் கலை விழாவை ஏப்ரல் (1992) திங்களில் சீரும் சிறப்புமாக நடத்தியது. தொடர்ந்து 37 கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெரும் புகழ் ஈட்டியது. நடனம், வாய்ப்பாட்டு, நட்டுவாங்கம், நாட்டிய நாடகம், பட்டி மண்டபம் எனக் கலைகள் பலவும் இந் நிகழ்ச்சிகளில் இடம்பெற்றுக் கண்டோர் இதயம் கவர்ந்தன.

கலை பண்பாட்டு இயக்ககத்தின் சார்பில் வாரந்தோறும் புதன், சனிக் கிழமைகளில் இளங்கலைஞர்களை ஊக்கு விக்கும் வகையில் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சிகள் பாங்குற நடைபெறுகின்றன. வளரும் கலைஞர்களும், பல்துறை வித்த கர்களும் பண்பாட்டுப் பலகணி நிகழ்ச்சி களில் இடம் பெறுகின்றனர். இளங்கலைஞர் களை ஊக்குவிப்பது மட்டுமன்றி, முது நிலைக் கலைஞர்களின் பயனுரைகளை யும் பெற்று அவர்களையும் போற்ற வேண்டு மென அரசு கருதியது. இவ்வகையில் திங்கள்தோறும் முதுநிலைக் கலைஞர் ஒருவரின் காட்சியுரை நடத்தவும் அரசு திட்டமிட்டு இதற்கென ரூ.7,500 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

கலை பண்பாட்டு இயக்ககத்தின்

அமைப்புகளில் ஒன்றாய் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இயங்கு கிறது. இம்மன்றத்திற்கு மாபெரு கலைஞர்களான வயலின் வேந்தர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன், நாடகக் காவலர் திரு. ஆர்.எஸ். மனோகர் ஆகிய இருவரையும் முறையே தலைவராகவும், உறுப்பினர் செயலராகவும் இவ்வரசு நியமித்தது. இயல், இசை, நாடக மன் றத்தின் சார்பில் இவ்வாண்டில் 39 கலைப் பெருமக்கள் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றனர் முப்பெருங் கலைஞர்கள் 'பொற்கிழி' அளித்துப் போற்றப் பெற்றனர்.

நாதசுரம், நாட்டியம், வாய்ப்பாட்டு, வீணை ஆகிய கலைகளில் ஊக்குவிக்கும் வகையில் 22 இளங்கலைஞர்கள் தெரிவு செய்யப் பெற்றனர். இக் கலைஞர் களுக்குப் புகழ்வாய்ந்த கலை மன்றங் களில் நிகழ்ச்சிகள் நடத்த உரிய வாய்ப் புகள் உருவாக்கி வழங்கப் பெறுகின்றன. இவ்வகையில் இதுவரையில் 38 நிகழ்ச்சி களை இவ்வியக்ககம் அமைத்து வழங்கி யுள்ளது.

பண்பாட்டுக் கொள்கொடைத் திட் டத்தின்படி, பீகார் கலைக்குழுவையும், இலட்சத் தீவுகள் கலைக் குழுவையும் வரவேற்று தமிழகத்தில் 11 கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடத்தப் பெற்றன. தமிழகக் கலைக்குழு குசராத், அரியானா மாநிலங்களுக்குச் சென்று 13 கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெருமை சேர்த்தது.

அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், மாரி முத்தாப் பிள்ளை ஆகிய இசைப் பெருமக்களைப் போற்றும் வகையில் சீர்காழியில் 'தமிழிசை மூவர்' விழா, 33 கலை நிகழ்ச்சிகளோடு சீரார்ந்த முறையில் தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மையத்தால் நடத்தப் பெற்றது. தொன்மைத் தமிழிசையைப் பரப்பும் வகையில் பழந்தமிழ்ப் பனு வல்கள், தேவார, திவ்வியப் பிரபந்தப் பாடல்களும், தமிழிசைக் கீர்த்தனைகளும், சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு இசைப் பயிற்சி மைய மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு, இம்மாணவர்கள் சென்னை சங்கீத வித்வத் சபையிலும், ராணி சீதை மன்றத்திலும், திருக்கழுக் குன்றம் இசை மாநாட்டிலும், பண் பாட்டுப் பலகனி நிகழ்ச்சிகளிலும், பங்கு கொண்டு இவ்விசை நிகழ்ச்சிகளை நடத்தினர். ஆடற்கலை பயிலும் மான விகள் வள்ளலார், தேவாரமூவர், பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் பாடல்களுக்கேற்ப நாட்டிய நாடகங்களும் அமைத்து வழங்கினர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பாபநாசம் சிவன், சங்கரதாச சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், டி.என். இராசரத்தினம் ஆகிய கலைப் பெருமக்களின் புகழ் போற்றும் வகையில் 'ஐவர் விழா'-வை இயல், இசை, நாடக மன்றம் நடத்தியது.

மதுவின் தீமைகளை விளக்கி மக்களை நன்னெறிப்படுத்தும் கருத்தமைந்த 'வெளிச்சம்' நாடகத்தை இம்மன்றம் 1.5.92-இல் அரங்கேற்றியது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இந் நாடக அரங்கேற்ற விழாவிற்குத் தலைமை யேற்றுச் சிறப்பித்தார்கள்.



★ நமது மக்கள் தொகையில், ஏறத்தாழ பாதிப்பேராய் இருக்கிற மகளிரைப் பாதுகாப்பாக உயர்த்திவிடுவதுதான் சுதந்திரம் பெற்ற நாகரிகம் உள்ள சமூகத்தில் ஒரு அரசின் கடமை என்ற கருத்தில், பெண்கள் முன்னேற்றம், மகளிர் உயர்வு ஆகியவற்றுக்கு எல்லா முன்னுரிமைகளும் வழங்கப்படும்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், 'கார்த்திக் பைன் ஆர்ட்ஸ்' அமைப்புடன் இணைந்து 'கோடை நாடக விழா'-வை ஜூன் திங்களில் நடத்தி வருகிறது. எட்டு நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் பல்வேறு நாடகங்கள் அரங்கேறுகின்றன.

கலை பண்பாட்டு இயக்கக அமைப்பு களில் ஒன்றான ஓவிய நுண்கலைக் குழுவின் சார்பில் உதகையில் 'வண்ணக் கலையரங்கு' இவ்வாண்டில் திறந்து வைக்கப் பெற்றது. இவ்வியக்கப் பொறுப் பில் இயங்கும் ஜவகர் பாலபவன் பள்ளி மாணவர்களின் 'கோடை விடுமுறைப் பயிற்சி வகுப்புகள்' நடத்தப் பெற்றன. 500 மாணவர்கள் இப் பயிற்சி வகுப்பு களால் பயனுற்றனர். இம்மாணவர்களின் 'கோடை முகாம்' புதுவையில் பயனுற நடத்தப் பெற்றது. இதில் 50 மாண வர்கள் பங்கு பெற்றுப் பயனுற்றனர்.

இவ்வாறு நாளும் பொழுதும் கலை வளர்ச்சியால் பொலிவுற்று மிளிரும் இந்நல்லாண்டின் சாதனைகள் பல் லாண்டுகள் தொடர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை பல்லாண்டு பாடி மகிழ்கிறது.

**எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்கிற நோக்கில், தமிழின் தொன்மையை, வன்மையை, வனப்பை எடுத்துக்காட்டும் வகையில், தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை பல்வேறு சிறப்புப் பணிகளைப் பாங்காய் ஆற்றி வருகின்றது.**

# தொற்று நோய் மருத்துவமனை நவீன தொற்று நோய்கள் நிறுவனமாக மாற்றி அமைக்கப்படும்

தண்டையார்ப்பேட்டையில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 1928-ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வரும் சென்னை மாநகராட்சித் தொற்று நோய்த்தடுப்பு மருத்துவமனையை, 1992-93-இல் விரிவுபடுத்தி நவீன வசதிகளுடன் கூடிய தொற்று நோய்கள் நிலையமாக மாற்றி அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

354 படுக்கை வசதிகள் கொண்ட தொற்றுநோய் மருத்துவமனையில் தற்போது காலரா, வயிற்றுபோக்கு, சின்னம்மை, தட்டம்மை, டைஃபாய்டு, புட்டாளம்மை, திடீர்க் காய்ச்சல், மலேரியா சுரம் ஆகியவற்றுக்கென 9 பிரிவுகள் தனித் தனியே உள்ளன. இவை அனைத்தும் புதுப்பிக்கப்பட வுள்ளன. இவற்றுடன் தொழுநோய், காச நோய்களுக்கான இரு பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டு மொத்தம் 11 பிரிவுகளாக இந்நிலையம் செயல் படும். தற்போது 'சி' வகுப்பு சிறப்பு ஒரு வார்டு மட்டுமே உள்ளது. புதி தாகத் தனித்தனி அறைகள் கொண்ட அனைத்து வசதியுடைய 'ஏ' வசதி சிறப்பு வார்டும் இவ்வாண்டு உரு வாக்கப்படும்.

**புறநோயாளிகள் பிரிவு**

புறநோயாளிகளுக்கெனத் தொடங் கப்பட்ட பிரிவு நாளொன்றுக்குச் சராசரி 300 பேருக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. வடசென்னை யில் வாழும் தொழிலாளர் மற்றும் குடிசைவாழ் மக்கள் நலத்திற்காக இப்பகுதி புதுக்கட்டடங்களுடன் விரிவுபடுத்தப்பட்டு 24 மணி நேரமும் இயங்கும் வகையில் மாற்றி யமைக்கப்படும். பலவேறு நோய் களுக்கான இரத்தப் பரிசோதனை களும், குறைந்த கட்டணத்தில் செய் வதோடு ஈ.சி.ஜி., எக்ஸ்ரே முதலிய வசதிகளும் புதிதாகச் செய்து தரப் படும்.

**புதிய வசதிகள்**

1. 354 படுக்கை வசதிகள் 500 படுக்கைகளாக உயர்த்தப்படும்.

2. தற்போது காலரா நோயாளி களுக்கு நரம்பூசி மூலம் செலுத்தப் படும் திரவ உற்பத்தி நிலையம் புதுப் பிக்கப்படும்.

3. தற்போதுள்ள சலவை இயந் திர நிலையத்தின் திறனை அதி கரிக்கும் வகையில் புதிய சலவை இயந்திரங்கள் பொருத்தப்படும்.

4. தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கையை உடனுக்குடன் எடுப்ப தற்கு வசதியாக செய்திகளை அவ் வப்போது தருவதற்கு வசதியாக மின்னணுத் தொலைத் தொடர்பகம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

5. தொற்று நோய் மருத்துவமனை வளாகம் முழுவதும் மின் விளக்குகள் அமைக்கப்படும்.

6. தொற்றுநோய் மருத்துவமனை யில் உள்ள நுண்ணுயிர் ஆராய்ச்சி நிலையம் விரிவுபடுத்தப்பட்டு பல வேறு தொற்றுநோய்கள் மருந்து களுக்கு எதிராகத் தொற்றுநோய்க் கிருமிகள் எவ்விதம் செயல்படுகின் றன என்பன போன்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

7. மருத்துவமனையில் குடிநீர் மற்றும் வடிகால்கள் செப்பனிடப் பட்டு பம்பு ரூம் அறைகள் கட்டி புதுப்பிக்கப்படும். ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனி மேல்நிலைத் தொட்டி கட்டி ஆழ்துளைக் கிணறு அமைத்து இணைப்புத் தரப்படும். இவ்வாறு கூடுதல் வசதிகளும் மேம் பாட்டுப் பணிகளும் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்க மாநக ராட்சி நடவடிக்கை எடுத்துவருகிறது.

## பொன்மொழிகள்

தனக்குக் கிடைக்கிற ஊதியத்தின் மதிப்பைக் காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத் தில் உயர முடியும்.

- ஆபிரகாம் லிங்கன்

அனுபவம் ஒரு கடுமையான ஆசிரியர்; அது சோதனையைத் தந்த பிறகு தான் பாடத்தைப் போதிக்கிறது.

- பெர்னாட்ஷா

உங்களைத் தெரிந்து கொள்ள உங்கள் மூளையை உபயோகியுங்கள்; பிறரைத் தெரிந்து கொள்ள உங்கள் இதயத்தைப் பயன்படுத்துங்கள்!

- ஷேக்ஸ்பியர்

• ஒரு மனிதனை, அவன் செய்யும் தொழிலைக் கொண்டு மதிப்பிடுதல் கூடாது. ஆனால், அவன் தனது கடமையை எம்முறையில் செய்கிறான் என் பதை அறிந்து மதிப்பிடுவதே முறையானது.

• செயல் - செயல் - எந்நேரமும் செயலில் ஈடு பட்டு, வாழ்க்கையை முழுமையாக வாழ வழி செய்துகொள்.

சுவாமி விவேகானந்தர்.

# கால்நடை வளர்ப்போம் மீன்வளம் சேர்ப்போம்

**கால்நடை மற்றும் மீனளத் துறையின் மூலம் கடந்த ஓராண்டில் நிகழ்ந்த சாதனைகள் பலப்பல.**

**20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறப்பு, சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம், பால்பண்ணை வளர்ச்சி, கன்று வளர்ப்பு, கோழி வளர்ப்பு கடல் மீனளம், மீனவர்க்கான நிவாரண நடவடிக்கைகள் முதலான பணிகளில் இத்துறை முன்னேற்றம் கண்டு வருகிறது.**

கால்நடை வளர்ப்புத் துறையின் சார்பில் பல்வேறு ஆக்கப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்புத் துறையின் செயலாக்கத்திற்காகப் பின்வரும் திட்டங்கள் ஏற்பளிக்கப்பட்டுள்ளன.

20 புதிய கால்நடை மருந்தகங்கள் திறப்பு ரூ.20.55 இலட்சம். செட்டி நாட்டில் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் சாணன் வெள்ளாடுப் பிரிவை ஏற்படுத்துதல் ரூ. 10.56 இலட்சம். கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்களை மருத்துவப் பரிசோதனை மையங்களாக நிலை உயர்த்துதல் ரூ.0.30 இலட்சம். மதுரையில் வெறி நாய்க்கடி மருத்துவப் பிரிவை ஏற்படுத்துதல் ரூ.4.73 இலட்சம்.

**உலக வங்கி உதவியுடன் கால்நடை மேம்பாட்டுத் திட்டம்**

மூன்று உறைவிந்து சேமிப்பு நிலையங்களைகோயம்புத்தூர், வேலூர், மதுரையில் நிறுவுதல்.

உறைவிந்து தொழில் நுணுக்கம் 243 செய்முறை இனவிருத்தி நிலையங்களுக்கு விரிவுபடுத்துதல்.

செயற்கை முறை இனவிருத்தி வேலை தொடங்க 500 சிறிய அளவிலான திரவ நைட்ரஜன் குடுவைகள் துணை மையங்களுக்கு அளித்தல்.

விவசாயிகளுக்கு இலவசமாகப் பசுந்தீவன விதைகள், கன்றுகள் ஆகியவற்றை அளிப்பது தொடரப்பட்டுள்ளது.

கால்நடைநோய் பரவுவதைக் கண்டறியும் பிரிவு கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்புத் துறையின் விரிவாக்கப்பிரிவு வலிமைப்படுத்தப்படுகிறது.

**சிறப்புக் கால்நடை உற்பத்தித் திட்டம்**

1,050 ஆடு வளர்ப்புப் பிரிவுகள், 3,500 கன்று வளர்ப்புப் பிரிவுகள், 25 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக மொத்தம் ரூ.222 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 4,575 விவசாயக் குடும்பங்களுக்கு இப்பிரிவுகளை ஏற்படுத்தியதற்காக, மானியம் அளிக்கப்படுகின்றது.

**மத்திய சிறப்பு உதவித் திட்டம்**

மாநிலத்தில் 1,550 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைப்பதற்காக ரூ.65.07 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம், இந்துமத ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 1,550 விவசாயக் குடும்பங்களுக்கும் முழுவதுமாகப் பயனளிக்கிறது. (திட்டச் செலவின் 50 சதவிகிதம் மானியமாகும்).

**பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்**

135 சிறிய பால்பண்ணைகள், 155 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஆகியன அமைக்கவும், 80 கலப்பினக் கன்றுகள் வளர்க்கவும், 200 சிறிய பசுந்தீவனப் பண்ணைகள் அமைப்பதற்கும் ரூ.60.12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உதக மண்டலத்தில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.12.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அபிஷேகப்பட்டியில் உள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு 'முர்ரா' இன எருமை மாடுகள் வாங்க ரூ.9.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பால்பண்ணை வளர்ச்சித்துறை**

எருமைப்பாலின் கொள்முதல் விலை, 23.2.92 முதல் ஒரு கிலோ கொழுப்புச்





சத்து/வெண்ணெய் சத்துள்ள பால் ரூ.67.15-லிருந்து ரூ.90-ஆக உயர்த்தப்பட்டது. இதனால் கூட்டுறவு ஒன்றியத்திற்கு ஒரு இலட்சம் லிட்டருக்கும் அதிகமாக எருமைப்பால் கிடைத்தது.

பசும்பால் கொள்முதல் விலை, மொத்தத்தில் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ.32.30-லிருந்து ரூ.36.15 ஆக உயர்த்தப்பட்டது.

**தொடக்கப்பால் வழங்கும் கூட்டுறவுச்** சங்கங்களின் சராசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 14.40 இலட்சம் லிட்டர் ஆகும். இதில், நாளொன்றுக்கு 11.64 இலட்சம் லிட்டர்கள் மாவட்ட ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டன.

பால்பெருக்குக் காலங்களில், புயல், மழைக்காலங்களிலும் தொடர்ந்து பெய்யும் கனத்த மழைக்காலங்களிலும் கூட, சென்னையில் சாதாரணமாக, பால் கொள்முதல் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 1991 நவம்பர் முதல் நாளொன்றுக்குச் சுமார் 2.00 இலட்சம் முதல் 3.00 இலட்சம் லிட்டர் வரையில் பால் அளவு குறைந்தது. இச்சூழ்நிலைகளிலும் கூட, பெருநகர் விற்பனை முந்தைய ஆண்டைவிடவும் 3 சதவீதம் அதிகமாக இருந்தது (நாளொன்றுக்கு 6.70 இலட்சம் லிட்டரிலிருந்து 7.10 இலட்சம் லிட்டராக அதிகரித்தது).

பால் உற்பத்தியாளர்கள் இணையம் விற்பனையில் புதிய சாதனைகளைப் படைத்துள்ளது. இது, கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட விற்பனையை விடவும் மிக அதிகமாகும்.

எண்ணற்ற பால்பொருட்கள் விற்பனை செய்யப்படும் வகையில் சில்லறைக் கடைகள் திறக்கப்பட்டன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஐஸ்கிரீம்கள் மற்றும் பால்கோவா ஆகியவற்றிற்குப் பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

### ஆய்வுப் பணியாளர்கள்

தவறான செயல்களில் ஈடுபட்டதாகச் சுமார் 80-க்கும் மேற்பட்ட விற்பனையாளர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டது. 'ஆவின்' அமைப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட 129 மனைகளில் 54 மனைகள் ஒதுக்கப்பட்டன. காமராசர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் 50,000 லிட்டர் திறன் கொண்ட பால்பண்ணை ஒன்றை அமைப்பது தொடர்பாக ரூ.34.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. புதிதாக 617 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன; இதனால், 35,000 கிராம உழவர் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்; இவர்கள் கூட்டுறவுப் பால் உற்பத்தி இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இவற்றில், மேற்படி 146 பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பெண்களுக்கென்றே அமைக்கப்பட்டுள்ளன. இதில், சுமார் 7,500 கிராமப் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### ஆதி திராவிடர்கள் நலத்திட்டம், கிறித்தவ மதம் மாறிய ஆதி திராவிடர்கள் நலத்திட்டம், மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டம் (தாட்கோ)

ரூ.407.44 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு, 25,544 கறவை மாடுகள் வாங்கப்பட்டு பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.

### கன்று வளர்ப்புத் திட்டம்

சுமார் 2,650 கலப்பினங்கன்றுகளைச் சீரிய முறையில் பராமரிப்பதற்காக 2,650 பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டது. தரமான எருமைக்கன்றுகளை சொந்தமாக வைத்துள்ள உழவர்களுக்கும் முதல் தடவையாக இத்தகைய நிதியுதவி அளிக்கப்பட்டது. 850 எருமைக்கன்றுகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன.

### கால்நடை சுகாதாரத் திட்டங்கள்

கிராம அளவில் 4,45,325 கால்நடைளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### கால்நடை வளர்ப்பு

2,250 கால்நடை மருந்தகங்களில் உறைவிந்து வசதிகளுடன் கூடிய கால்நடை வளர்ப்பு வசதிகள் உள்ளன. கூட்டுறவுச் சங்க அளவிலான பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு 6.25 இலட்சம் செயற்கைமுறை இனவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 75,000 கிடாரிக்கன்றுகள் பிறந்துள்ளன.

உதகமண்டலத்திலும் ஈரோட்டிலுமுள்ள உறைவிந்து நிலையங்களில் 13 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

### செம்முறைப்படுத்துதல்

பெருநகர் பால்பண்ணைகளை நாள்தோறும் கண்காணிக்கும் முறையினால் நல்ல பயன் கிடைத்துள்ளது. 1990-91-ஆம் ஆண்டில் 7 சதவிகிதமாக இருந்த கொழுப்பு, கொழுப்பில்லாத திடப்பொருள் இழப்பு, 1991-92-ஆம் ஆண்டில் 3.5 சதவிகிதமாகக் குறைந்துள்ளது. பெருநகர் பால்பண்ணைகளின் திறனளவு பயன்பாடு சுமார் 128 சதவிகிதம் ஆகும்.

பால் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள கன்னியாகுமரி, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களையும் கொண்டு வர முடிவு செய்யப்பட்டது.

பிளாஸ்டிக் மணிகளை உருக்கி நாளொன்றுக்கு 10 டன் பாலிதீன் பைகள் தயாரிக்கும் திறன் கொண்ட தொழிற்சாலை ரூ.2.5 கோடி செலவில் உளுந்தூர்ப்பேட்டையில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

### தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்

தமிழ்நாட்டில் கோழி வளர்ப்பை மேம்படுத்தும் பொருட்டு ரூ.100 இலட்சம் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன் முழுவதும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக தமிழ்நாடு கோழி

வளர்ப்பு நிறுவனம் 12.7.1973 அன்று ஏற்படுத்தப்பட்டது.

வணிக முறையிலான கலப்பினக் கோழிக்குஞ்சு வளர்ப்பு முறையைக் கொண்டு வந்தவுடன் இம்மாநிலத்தில் கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை 1·2 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது. நம்முடைய நாட்டில் தமிழ்நாடு கோழி வளர்ப்பில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 1989-90-ஆம் ஆண்டு மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.30.95 இலட்சம் செலவில் (50 சதவிகிதம் பங்கு மூல தனம் 50 சதவிகிதம் கடன்) காமராசர் மாவட்டத்திலுள்ள அனுப்பன் குளத்தில் புதிய கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்தைத் தொடங்க அரசு ஒப்புதலளித்துள்ளது. கால்நடை வளர்ப்புத் துறையிடமிருந்து 'டாப்கோ' நிலத்தை எடுத்துக் கொண்டுள்ளது. கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் கோழிக்குஞ்சு உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1990-91-ஆம் ஆண்டு மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.32.45 இலட்சம் செலவில் (50 சதவிகிதம் பங்கு மூலதனம் 50 சதவிகிதம் கடன்) கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்றுமொரு கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்தை ஏற்படுத்த அரசு ஒப்புதலளித்துள்ளது. நிலம் தெரிந்தெடுக்கப்பட்டு உடைமையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டடப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஜப்பான் வகை குயில் காடைக் குஞ்சுகளை விற்பனை செய்வதற்கு வாய்ப்பிருப்பதால் 1989-ஆம் ஆண்டிலிருந்து செங்கற்பட்டில் ஜப்பான் வகை காடைக் குஞ்சு பொரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றுமொரு ஜப்பான் வகை காடைக் குஞ்சு பொரிப்பு நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம் தெக்குப்பாளையத்தில் 1991 ஜூனிலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

'டாப்கோ'வின் தீவனக் கலவைப் பிரிவு நந்தனம் (சென்னை), திருப்பூர் (கோயம்புத்தூர்), கப்பலூர் (மதுரை) ஆகிய இடங்களில் அமைந்துள்ளது. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ், மத்திய அரசும் டாப்கோவும் செலவை சமமாகப் பங்கீட்டுக் கொள்ளும் வகையில், ரூ.21 இலட்சம் செலவில் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள காட்டுப்பாக்கத்தில் 8 மணி நேரமுறை மாற்றுப் பணியில் 50 மெட்ரிக் டன் கோழித் தீவனம் தயாரிக்கும் திறன் கொண்ட நவீன கோழித் தீவன கலவைத் தொழிற்சாலை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோழி வளர்ப்புக்குத் தரமான தீவனத்தைத் தயாரித்து விற்பனை செய்வதை மேம்படுத்த இது பெரிதும் உதவும். கோழித் தீவனத்திற்காகத் தரமுள்ள தனிவலிக் கலவை தயாரிப்பதற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள சேஷஞ்சாவடியில் ரூ.1.78 இலட்சம் செலவில் தன் சொந்தப் பயனுக்காக 'டாப்கோ', கனிவளக் கலவைத் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத்தொழிற்சாலை 1991 பிப்ரவரியிலிருந்து செயற்படத் தொடங்கியுள்ளது.

தீவனத் தயாரிப்புப் பிரிவுகள் தயாரித்த கோழித் தீவனத்தை விற்பனை செய்வதற்காக, 'டாப்கோ', சென்னை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், மதுரை, நாமக்கல், தருமபுரி ஆகிய இடங்களில் விற்பனைப் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது. உடல் ஊனமுற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பற்றிருப்பவர்களுக்கும் தேசிய திட்டத்தின் கீழ், சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் பொருட்டு, 'டாப்கோ', சில்லறை விற்பனை நிலையங்களுக்கு விற்பனை முகவர்களை நியமித்துள்ளது. இதுவரை 96 பேர்களுக்கு இது தொடர்பாக உதவியளிக்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் 11 மாவட்டங்களில் 650 கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்காகச் சிறப்புக் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ், ரூ.33.85 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. 1990-91-ஆம் ஆண்டில் தாமதமாக நிதி வழங்கப்பட்டதால், 1991-92-ஆம் ஆண்டில் தான் பணி மேற்கொள்ளப்பட்டது. 706 கோழி வளர்ப்புப் பிரிவுகளை ஏற்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேற்குமலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 4.50 இலட்சம் ரூபாய் செலவில் கோயம்புத்தூருக்கு அருகே தெக்குப்பாளையத்தில் கோழி தோலுரிக்கும் நவீனக் கூடம் ஒன்றைத் தொடங்கும் மற்றொரு திட்டத்தை மேற்கொள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கருதியுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தொழிற்சாலை 1992-93-ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.

**முட்டைகள் ஏற்றுமதி**

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம், அது தொடங்கப்பட்ட காலத்தி

விருந்து முதல் முறையாக முட்டைகளை அயல்நாடுகளுக்கு அனுப்ப முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை குவைத், துபாய், பஹ்ரைன் போன்ற நாடுகளுக்கு 9 தடவை கப்பல்களில் முட்டைகள் ஏற்றி அனுப்பப்பட்டன. அவ்வாறு கப்பல்களில் மொத்தம் 26.4 இலட்சம் முட்டைகள் அனுப்பப்பட்டன. இதன் மூலம் இது நாள் வரை 1.05 இலட்சம் ரூபாய் ஆதாயம் கிடைத்துள்ளது.

**மீனளத் துறையின் மூலம் செயல்படுத்தும் புதிய திட்டப் பணிகள் வருமாறு**

**கடல் மீனளம்**

கடலோரப் பகுதிகளிலும், தொலை கடல் பகுதிகளிலும், மீன் பிடிக்கப் பயன்படுத்தக்கூடிய, 28 அடி அளவுடைய 'மரைன் பிளைவுட் மீன்பிடிப் படகு' எனப்படும் புதிய எடைக்குறைவான மீன்பிடிப் படகிற்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தற்போதைய அரசு கொண்டு வந்துள்ளது. கியருடன் கூடிய (Gear) ஒவ்வொரு படகின் விலை ரூபாய் ஒரு இலட்சம் ஆகும். 1991-92-ஆம் ஆண்டில் 70 பிளைவுட் மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு ரூ.2.00 இலட்சம் 20 சதவிகிதம் உதவித்தொகை நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிப் படகுகள் வாங்குவதற்காக மீனவர்களுக்கு உதவித்தொகை வழங்க, கால்நடை வளர்ப்பு - மீனளத் துறையின் 30.3.92-ஆம் நாளிட்ட அரசாணையில் அரசு ரூ.50.00 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டம் 1992-93-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**சென்னை, மெரினா கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்தல்**

இந்தக் கடல்வாழ் உயிரினக் காட்சியகத்தில் பல்வேறுபட்ட கடல் நீர்வாழ் உயிரினங்கள் காட்சிக்கு வைக்கப்படும். இந்தக் காட்சியகம் இளங்குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பொழுதுபோக்கு வசதிகளை அளிப்பதுடன், ஒரு கடல் ஆராய்ச்சி கல்வி மையமாகவும் விளங்கும். இது உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைச் சென்னைக்கு வரவழைக்கும் சிறந்த சுற்றுலா மையமாகவும் விளங்கும். எனவே, சென்னையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்துவது, சென்னை மாநகருக்கு அழகு சேர்ப்பதுடன் பொழுதுபோக்கு வசதிகளையும் அளிக்கும். மேலும் அது கடல் ஆராய்ச்சி மையமாகவும் விளங்கும். தற்போது சென்னை மெரினாக் கடற்கரையில் மீன்காட்சியகம் ஒன்று உள்ளது. மெரினாக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சியகம் ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரிப்பதற்காக 1991-92-ஆம் ஆண்டில் அரசு ரூ.5.00 இலட்சம் அனுமதித்துள்ளது.

**உள்நாட்டு மீனளம்**

**மீன்சினைகள் உற்பத்திக்காக தனியார் மீனவர்களுக்கு நிதியுதவி**

எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மீன்சினைகளின் தேவை 170 மில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகளின் சராசரி அளவு கிட்டத்தட்ட 60 மில்லியன் ஆகும். அது 170 மில்லியன் மீன் குஞ்சுகளாக உயர்த்தப்படவேண்டும்.

மீன்சினைகள் தேவையில் நமது மாநிலத்தில் பற்றாக்குறையை ஈடுசெய்ய, குறைந்த செலவிலான தொழில் நுட்ப உத்தியைப் பயன்படுத்தி, 10 இலட்சம் மீன்சினைகளை உற்பத்தி செய்வதற்காக 15 தனியார் மீன்சினை உற்பத்தியாளர்களுக்கு 25 சதவிகிதம் உதவித்தொகை வழங்க அரசு, 1991-92-ஆம் ஆண்டில் ரூ.3.75 இலட்சம் அனுமதித்துள்ளது. மீன்சினைப் பண்ணை ஒன்றுக்கான மூலதனச் செலவு ரூ.1.80 இலட்சம் ஆகும். அரசு 1992-93- ஆம் ஆண்டில் 35 தனியார் மீன்சினை உற்பத்தியாளர்களுக்கு ரூ.8.75 இலட்சம் அனுமதித்துள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட பயன்பெறுவோருக்கு, சென்னையிலுள்ள பணியாளர் பயிற்சி நிறுவனத்தில் மீன்சினைப் பண்ணைகள் நிருவாகம் பற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற பிறகு அவர்கள் மீன்சினைப் பண்ணைகள் தொடங்க வங்கிக் கடன் பெறுவர். அதன் பின்னர் வங்கிகள் மூலம் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். 1991-92-ஆம் ஆண்டில் பயன்பெறுவோர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**தூநீர் இறால் மீன்குஞ்சு பொரிப்பு**

கால்நடை வளர்ப்பு - மீனளத் துறையின் 14.5.1992-ஆம் நாளிட்ட 154-ஆம் எண். அரசாணையில் தனியார் மீன்குஞ்சு உற்பத்தியாளர் மூலம் 10 மில்லியன் இறால் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யத் தூநீர் இறால் மீன்குஞ்சு பொரிப்பு மையத்தை ஏற்படுத்துவதற்காக, செலவில் 25 சதவிகிதத்தை உதவித் தொகையாக வழங்க அரசு ரூ.2.5 இலட்சம் அனுமதித்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அத்தகைய குஞ்சு பொரிப்பு நிலையங்கள் ஏழு ஏற்படுத்தப்படும்.

**இறால் வளர்ப்பிற்காக உவர்நீர்ப் பகுதிகளை மேம்படுத்துதல்**

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ரூ.15.26 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு, 50 எக்டேர் உவர்நீர் நிலப் பகுதியில் இறால் மீன் வளர்ப்புப் பணியை மேற்கொள்ளும். இந்த உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பைக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், சிதம்பரனார் மாவட்டத்தில் தருவைகுளத்தில் தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்த தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்குப் பங்கு மூலதன உதவியாக ரூ.25 இலட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் ஒன்றான ஒருங்கிணைந்த உவர்நீர் மீன் பண்ணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்களை இறால் குஞ்சு பொரிப்பு



நிலையத்தை மேம்படுத்த தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ.25 இலட்சம் (மத்திய அரசு பங்கு ரூ.12.5 இலட்சம், மாநில அரசு பங்கு ரூ.12.5 இலட்சம்) வழங்க அரசு இவ்வாண்டில் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக, இத்தொகை பெறப்பட்டு தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

**மீனவர் நல நடவடிக்கைகள்**

**மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு கிராமங்களில் வாழும் கடல்வாழ் மீனவர்கள் தகுந்த நிலத்தை அரசிடம் ஒப்படைத்தால் அந்நிலத்தில் அவர் களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 1991-92-ஆம் ஆண்டில், ரூ.3.57 கோடி செலவில், தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில், மீனவர்களுக்காக 27 கிராமங்களில் 2,100 வீடுகள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள் ளது. இத்திட்டத்தினால் 2,100 மீன வர்கள் பயனடைவர்.

**மீனவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள்**

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் சைமன் காலனியில் 5.12.90 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மீன்பிடி கருவிகளை இழந்த மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்க, அரசு அனுமதி வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட 75 மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தனர்.

**இறந்துவிட்ட மீனவரின் குடும்பத்திற்கு, உடல் ஊனமுற்ற மீனவர்களுக்கு அளிக்கப்படும் காப்புறுதி நிவாரணத் தொகையை அதிகரித்தல்**

தமிழ்நாட்டில் 1,66,912 மீனவர் களுக்காகச் செலுத்தப்படும் காப்புறுதி பிரீமியத் தொகையை 1.7.91-ஆம் நாள் முதற்கொண்டு ஆண்டொன்றுக்கு மீனவர் ஒருவருக்கு ரூ.9-லிருந்து ரூ.10.84 ஆக உயர்த்தி தமிழ்நாடு அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. இந்தக் காப்புறுதி பிரீமிய தொகையின் அளவு அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, 1.7.1991 முதற்கொண்டு விபத்தில் இறந்துவிடுபவர்களைப் பொறுத்தமட்டில் அவர் குடும்பத்திற்கும் நிரந்தரமாக உடல் ஊனமுற்று விடுபவர்களுக்கும் வழங்கப் படும் காப்புறுதி நிவாரண தொகையின் அளவு ரூ.15,000 லிருந்து ரூ.21,000 ஆகவும், ஓரளவிற்கு உடல் ஊனமுற்ற வர்களுக்கு வழங்கப்படும் காப்புறுதி நிவாரணத் தொகையின் அளவு ரூ.7,500-லிருந்து ரூ.10,500 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டம்**

இதுவரை இத்திட்டத்தின் கீழ், மீனவர் ஒருவரிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் 9 மாதம் வசூலிக்கப்பட்டு, மீனவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.10 வீதம் மாநில அரசு அதன் பங்குத் தொகையாக வழங்கி, மொத்தம் வரும் ரூ.180-யை மீன்பிடித் தொழிலை செய்ய முடியாமலிருக்கும் கால அளவில் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.60 வீதம் 3 தவணை களில் வழங்கப்பட்டது.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் ஒவ்வொரு மீனவரிடமிருந்தும் திங்கள் ஒன்றுக்கு 45 ரூபாய் என்ற அதிகரிக்கப் பட்ட சந்தாத் தொகையை 8 மாதக் காலத்திற்கு வசூலிப்பதற்கும், அவ்வாறு சந்தாத் தொகையைச் செலுத்திய ஒவ்வொரு மீனவருக்கும் மாநில அரசுப் பங்காக மாதமொன்றுக்கு ரூ.45 ரூபாயையும் மத்திய அரசுப் பங்காக மாதமொன்றுக்கு 45 ரூபாயையும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகையுடன் சேர்த்து திருப்பிக் கொடுக்க தமிழ்நாடு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. முழுத்தொகையான 1,000 ரூபாய் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில், மீன்பிடிக்க இயலாத காலத்தில் 4 மாதத்திற்கு 4 தவணைகளில் மீனவர் ஒவ்வொருவருக்கும், மாதமொன்றுக்கு 250 ரூபாய் என்ற வீதத்தில் திருப்பிக் கொடுக்கப்படும்.

**மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மகளிருக்கான கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவித் தொகை வழங்குதல்**

**பங்கு மூலதன உதவித்தொகை**

தற்போது மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மகளிருக்காக 63 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இந்த ஆண்டில் பங்கு மூலதன உதவித் தொகையாக 85,000 ரூபாய் 5 சங்கங்களுக்கு அளிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**மீனவ மகளிருக்கான அலுமினியக் கொள்கலன்கள்**

இந்த ஆண்டில் சென்னையிலுள்ள தமிழ்நாடு சமூக நலவாரியம், 24 மீனவ மகளிர் சங்கங்களுக்கு 1,09,600 ரூபாயை மீன்களைக் கொண்டு செல்வதற்காக 1,360 அலுமினியக் கொள்கலன்களை வாங்க, 50 சதவிகிதம் உதவித் தொகையாக வழங்க அனுமதியளித்தது.



**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம்**

சென்னை, மாதவரம் பால்பண்ணையைத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்குத் தலைமையிடமாக அமைப்பதற்குப் பொருத்தமான இடம் என அரசு தெரிந்தெடுத்துள்ளது.

பல்கலைக் கழக மானியக் குழுச் சட்டத்தின் (12'B) பிரிவின் கீழ், நிறுவன மேம்பாட்டு மானியங்கள் உட்பட, அனைத்துச் செயல் நோக்கங்களுக்கும் மத்திய நிதியுதவியைப் பெறுவதற்குத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் தகுதியுடையதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.1.65 கோடியுடன் பால் பண்ணை நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்காக, இறைச்சி மேம்பாட்டுக் கழகத்தின் கொடுவள்ளி வளாகம், இப்பல் கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மேம்பாட்டுப் பணிக்காக, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ரூ.53 இலட்சம் மானியத் தொகை அனுமதித் துள்ளது.

**கல்வி**

1991-92-ஆம் கல்வியாண்டில், பட்டப்படிப்பு நிலையில், பட்ட மேற்

படிப்பு நிலையில், இப்பல்கலைக் கழகத்தின் மூன்று கல்லூரிகளில், பருவமுறை தேர்வு நடத்தும் கல்வி முறை செயல் படுத்தப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கப் படிப்புகளில், கால்நடை அறிவியல் பட்ட மேற்படிப்பும், கால்நடைப் பராமரிப்பும் பொருளாதாரப் படிப்பும் கொண்டுவரப் பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில், தூத்துக்குடி, மீன் வளர்ப்பு-ஆராய்ச்சி நிலையத்தில் ஐந்து துறைகளில் மீன் அறிவியல் பட்ட மேற்படிப்புப் பாட வகுப்பும், இரண்டு துறைகளில் பி.எச்டி., படிப்பும் தொடங் கப்பட்டுள்ளன.

இப்பல்கலைக் கழகத்தின் மூன்று கல்லூரிகளில், பட்டப்படிப்பு நிலையிலும், பட்ட மேற்படிப்பு நிலையிலும் ஆக இரு நிலைகளிலும் 1543-க்கும் மேற் பட்ட மாணவர்கள் இப்படிப்புகளைப் பயின்று வருகின்றனர். இந்த ஆண்டில், கால்நடை அறிவியல் பட்டப்படிப்பில் (B.V.Sc.,) 224 மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இதில், 54 பேர் மாண வியர். கால்நடை அறிவியல் பட்ட மேற் படிப்பில் 39 மாணவர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இதில் 6 பேர் மாண வியர். மீன் அறிவியல் பட்டப்படிப்பில் 17 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மீன் அறிவியல் பட்ட மேற்படிப்பில் 9 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றில் முறையே ஒவ்வொரு மாணவி யும் உள்ளனர்.

சென்னை, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் இல்லத் தில், மாணவிகளுக்கென, தனியாக ரூ.14.85 செலவில் ஒரு இல்லம் கட்டும் செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், கல்வித் தகுதியின் அடிப்படையில் 14 பேருக்கு படிப்புதவித் தொகை வழங்கவும், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மெட்ரிக் படிப்பிற்குப் பிந்திய படிப்பு பயிலும் 13 மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கவும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில், கால்நடை மருத்துவம் பயிலும் 21 மாணவர்களும், மீனளம் பயிலும் 4 மாணவர்களும் படிப்புதவி பெறும் இளநிலை ஆராய்ச்சி மாணவர்களாகத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

புத்தகங்கள் நமக்கு வழி காட்டுவதோடு தனிமையிலே நாம் இருக்கும்போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன், நமக்கு நாமே பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய் கின்றன.

- கோலியர்

இப்பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பின்னர், 17 அறநிலையங்கள் அமைக் கப்பட்டன. இந்த ஆண்டில் 3 அறநிலை யங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கல்வி - பயிற்சி**

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில், ஸ்ரீநகரில் உள்ள, வேளாண்மை- தொழில் நுட்பத் துறைக்கான எஸ்.கே. பல்கலைக் கழகத் தைச் சேர்ந்த கால்நடை அறிவியல் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியர் களுக்கு மருத்துவமனை பயிற்சி, இந்த மருந்தகத்தில் அளிக்கப்பட்டது.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள கால்நடைப் பரி சோதனை சிகிச்சைத் துறையில், கால் நடை மருத்துவம் குறித்த மூன்று படிப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன.

கால்நடை உதவி அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள், கால்நடை வளர்ப்புத் துறை உதவி இயக்குநர்கள், 'டாப்கோ' தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தி யாளர் இணையம் போன்ற பல்வேறு அமைப்புகளின் அதிகாரிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோருக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேலும், பணியிடைப் பயிற்சி வகுப்புகள் 6 நடத்தப்பட்டன. இதில் 87 அதிகாரிகள் பங்கேற்றனர்.

கோழி வளர்ப்பு, பால்பண்ணை, முயல் வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கால்நடைக் கலப்புத் தீவனப் பயிர் வளர்ப்பு, ஒருங்கிணைந்த வாத்து வளர்ப்பு, மீன் வளர்ப்பு முதலிய வகுப்புகள் இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு மையங்களில் நடத்தப்பட்டன.

**ஆராய்ச்சி**

மாதவரத்தில், 'வைரஸ்' கிருமிகள் தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கென்று ஒன்றும், நுண்ணுயிர்க்கிருமிகள் தடுப்பு மருந்து ஆராய்ச்சிக்கென்று ஒன்றுமாக, இரண்டு கால்நடை ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களைச் சேர்ந்த மீனவப் பெண் களுக்கு மீன்பிடிப் பொருட்களைத் தயாரிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக, பயிற்சி வகுப்புகள் தொகுதி தொகுதி யாக நடத்தப்பட்டன.

கால்நடை மருத்துவப் பயனுக்காகவும் பொதுமக்கள் சுகாதார நலப் பயன் பாட்டிற்காகவும் 'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) என்கிற தனி சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டது.

இங்கிலாந்து நாட்டின், வெப்ப மண்டல கால்நடை மருத்துவ மையம், கால்நடைச் சுகாதார ஆய்வு மையத்தை, கால்நடை காசநோய் ஆராய்ச்சியை மேற் கொள்ளுவதற்கு ஏற்ற இணைப்பு நிறுவையாக அங்கீகரித்தது.

மத்தியஅரசின் தரிசு நில மேம் பாட்டுத் துறை, நடப்பாண்டில் வேளாண்-காடு வளர்ப்புத் திட்டத்திற்காக, ரூ.38 இலட்சம் அனுமதித்தது.

கல்வி, பயிற்சிக்காக, பொதுப்பணித் துறையைச் சேர்ந்த சித்தாறு அணை, தூத்துக்குடி மீன் வளர்ப்பு-ஆராய்ச்சி நிலையத்திற்கு (FC & RI) மாற்றப்பட்டது.

பாறை வகை லரப்ஸ்டர்கள் தொடர்ந்து கிடைக்கும் வகையில் வளர்க்கப்பட்டன. அவற்றைப் பிடித்து வைத்து வளர்க்கும் கால அளவில் அவை, 2 இலட்சத்திற்கு அதிகமான 'லார்வாக் களை' உற்பத்தி செய்துள்ளன.

**மருத்துவமனை**

கண்காணிப்பு வசதி கொண்ட இ.இ.ஜி. (E.E.G.) இ.சி.ஜி. (E.C.G.) கருவிகள், கண் பரிசோதனைக் கருவிகள் போன்ற நவீன சாதனங்கள் கொண்ட தொடக்கப் பரிசோதனைப் பிரிவு, பொது மக்களின் நலனுக்காகத் தொடங்கப் பட்டது. மேலும் நிணநீர் மாற்றுச் சிகிச்சை, இரத்த மாற்றுச் சிகிச்சை வசதிகள் கொண்ட மும்முரச் சிகிச்சைப் பிரிவும் தொடங்கப்பட்டது.

சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களின் நலனுக்காக, நடப்பாண்டில் நடமாடும் மருந்தகம் செயல்படத் தொடங்கியுள்ளது.

# நூல் நயம்

**சன்மார்க்கம்**

**ஆசிரியர்:** மகாத்மா காந்தி

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்
காந்தி மியூசியம் வளாகம்
மதுரை-625 020.

பக்கம்:48 விலை:ரூ.5/-

அண்ணல் காந்தியடிகளின் 'நீதி தர்மம்' என்ற குஜராத்தி நூலின் மொழி பெயர்ப்பாகும் இது. 1921-ஆம் ஆண்டி லேயே தமிழ்த் தென்றல் திரு.வி.க. இந்நூலுக்கு மதிப்புரை வழங்கியுள்ளார். வாழ்விலும் தொழிலிலும் நீதி கடை பிடிக்க வேண்டும். அதுவே சிறந்த கடவுள் வழிபாடு ஆகும். தன்னலமே நீதியை மறக்கச் செய்யும். தன்னலங் கரு தாது உயிர்கட்குச் சேவை செய்வதே கடவுள் வழிபாடு என்று சன்மார்க்க நெறியைச் சொல்லும் இந்நூல் ஏழாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. தர்மமும், சத்தியமும் வாழ அறிவுரை நிரம்பிய நூல்.

—மாமூலன்

**'இனிப்பு - காரம் - பலகார வகைகள்'**

**ஆசிரியர்:** வசந்தி அம்மாள்

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்,
92, கங்கை அம்மன் கோயில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:80 விலை:ரூ.10/-

'இனிப்பு - காரம் - பலகார வகைகள்' என்னும் இந்தச் சமையல் புத்தகம் எளிய நடையில் அனைவருக்கும் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளது. பலவகையான இனிப்பு மற்றம் கார வகைகள் தனித்தனியாகப் பட்டியலிடப் பட்டு ஒவ்வொன்றும் செய்முறை பற்றி யும் அவற்றைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள், அவற்றின் அளவுகள் பற்றியும் விவரமாக தரப்பட்டுள்ளன.

சமையலின்போது கவனிக்க வேண்டி யவை பற்றி இந்நூலின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருப்பது உபயோகமானதும் பாராட்டுக்குரியதுமாகும். இல்லத்தரசி களுக்கும், சமையலில் ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐய மில்லை.

—ஜே. சந்திரன்

**SIDDHA SYSTEM OF HOME REMEDIES**

**ஆசிரியர்:**
டாக்டர் எல். சிதம்பரத்தாணுப் பிள்ளை

**வெளியீடு:**

சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்,
ஈ-32, அண்ணா நகர் கிழக்கு,
சென்னை-600 102.

பக்கம்:125 விலை:ரூ.150/-

நம் உடலில் ஏற்படும் நோய்களைக் குறிப்பிட்டு, மருத்துவ ஆலோசனை அளிப்பதோடு, நோய்தீர்க்கும் மருந்தை எவ்வாறு தயாரிக்க வேண்டும், தயாரிப்ப தற்கு என்னென்ன பொருட்கள் எந்த அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும், அதை எப்படி உட்கொள்ள வேண்டும் என்பதை விவரமாகவும், தெளிவாகவும் எழுதியுள்ளார் இந்நூலாசிரியர்.

நூல் எளிய முறையில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. நோய்களின் பெயர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக மஞ்சள்காமாலை நோய்க்கு JAUNDICE (ஜாண்டிஸ்) என்பதை ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு MANJAL KAMALAI என்று குறிப்பிட்டு, ஒரு மருத் துவச் சொல் அகராதி தேவையில்லாத வாறு நாம் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

நாள்தோறும் அவ்வப்போது ஏற்படும் சிறிய, பெரிய நோய்களுக்கு எளிய முறையில் நாமே, நமக்கு மருத்துவம் செய்து கொள்ளும் அளவிற்கு இப் புத்தகம் ஒரு மருத்துவராகவே விளங்கு கிறது. ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய நூல்.

—ஆர். இராஜசேகரன்

**கேள்வி ஞானம்**

**ஆசிரியர்:** தங்கவயல் லோகிதாசன்

**வெளியீடு:**

பாண்டியன் பதிப்பகம்
20, சீனிவாசப் பெருமாள்
முதல் தெரு
சென்னை-600 014

விலை: ரூ.15 பக்கம்: 112

கேள்வியும் பதிலும் இணைந்த அறிவுபூர்வமான நூல்.

வாழ வைப்பது எது?
தாயின் அன்பு.
தாழ வைப்பது எது?
தானெனும் அகந்தை.

இப்படிப் பல எண்ணப் பிழிவுகள் இதயத்தைத் தொடுகின்றன.

**தையற்கலை வழிகாட்டி ஆண்கள் உடை (இரண்டாம் பாகம்)**

**ஆசிரியர்:** ஆர்.எஸ். பாலகுமார்

**வெளியீடு:**

நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிட்., 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:96 விலை:ரூ.7/-

தமிழ் படிக்கத் தெரிந்து, கொஞ்சம் தையற்கலையில் ஆர்வம் இருந்தால் போதும் இந்நூலின் துணையுடன் ஓர் சிறந்த தையற் கலைஞராக பரிணமிக்க முடியும்.

துணிகளை வெட்டுதல், தைத்தல் மட்டுமல்ல நூல் வகை, ஊசி வகை, துணிகளில் படிந்துள்ள கறைகளை நீக்கும் வகை, இஸ்திரி போடுதல் ஆகியவையும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

தையல் இயந்திரங்களின் வகைகள், அவற்றின் பயன்கள் ஆகியவையும் இந்நூலில் உண்டு.

இந்நூலுக்கு விளக்கப்படங்கள் மிகமிக அவசியம். அவை குறைவின்றி, தெளி வாக, பெரிய, பெரிய படங்களாக வெளி யிடப்பட்டுள்ளன. உண்மையில் இந்நூல் தையல் கலைக்குச் சிறந்த வழிகாட்டி தான்.

- என்.கே. சாமி.

**நினைவுகள் உன்னோடு தான்**

**ஆசிரியர்:** லட்சுமி ராஜரத்தினம்

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்,
92, கங்கை அம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.

பக்கம்:152 விலை:ரூ.17/-

திருமணத்திற்கு முந்திய நாட்களில் மணமகளின் மகிழ்ச்சிச் சிதறல்களோடு கதை தொடங்குகிறது.

அழகிய திறமைமிக்க நல்ல மனிதனான மணமகன், திருமணத்திற்கு முன்பு நோய்வாய்ப்பட்டுச் சுகம் பெற்று, தாலி கட்டிய பிறகு மீண்டும் நோயுற்று... காணாமல் போய்விடுகிறான். இடையில் திருமணத்திற்கு முன்பு வேறு ஒருவனிடம் நெருங்கிப் பழகித் தன்னை இழந்த கதாநாயகி, காணாமல்போன கணவனைத் தேடுகிறாள்.

இறுதியில் கணவனைச் சந்திப்பது தமிழ்த் திரைப்படங்களில் வருவதுபோல் இருந்தாலும் ஆசிரியரின் கதை சொல்லும் முறைக்கும், வேகமான எழுத்துக்காகவும் இக்கதையை சுவைத்துப் படிக்கலாம்.

- என். குமார்.

# புரட்சித் தலைவியின் முதலாண்டு ஆட்சி- ஒரு கண்ணோட்டம்

இந்தியத் துணைக் கண்டத்தின் தேர்தல் வரலாற்றுச் சாதனைகள் அனைத்தையும் முறியடித்து, அரசியலில் இதுவரை யாரும் செய்யாத மகத்தான புரட்சியை ஏற்படுத்தி, போட்டியிட்ட 167 இடங்களில் 163 இடங்களை வென்ற அ.இ.அ.தி.மு.க.-வின் ஈடு இணையற்ற புரட்சித் தலைவி, மாண்புமிகு ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ் நாட்டின் 18-வது முதல்வராக 24.6.1991 அன்று பதவியேற்றார். அவரது சீரிய தலைமையில் பதினெட்டுப் பேர் கொண்ட அமைச்சரவை அன்று பதவியேற்றது.

தமிழக வரலாற்றில் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டு முதல்வராகப் பொறுப் பேற்ற முதல் பெண்மணி என்னும் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையே சாரும். இந்தியத் திரு நாட்டில் மாநில முதல்வராகப் பொறுப் பேற்கும் ஆறாவது பெண் முதலமைச்சர் என்ற பெருமைக்கு உரியவர். தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் முதன் முறையாக 30 பெண்கள் உறுப்பினரானார்கள்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் 366 நாள் ஆட்சி யில் 366-க்கும் மேற்பட்ட சாதனைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், முக்கியமான சில சாதனைகள் மட்டும் கீழே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

**மலிவு விலை மது ஒழிப்பு**

மாண்புமிகு முதல்வர் புரட்சித்



தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற தும், முதல் நடவடிக்கையாக மலிவு விலை மதுக்கடைகளை மூடிவிட ஆணை யிட்டார். முதல்வரின் முதல் ஆணை இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. இந்த

என். இளங்கோ

முடிவினால் அரசுக்கு கடந்த நிதி யாண்டில் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.320 கோடி ஆகும். என்றாலும் பாமர மக்களை அழிவுப் பாதையில் இருந்து மீட்பதற்காகவே தைரியமான இம்முடி வினை முதல்வர் அவர்கள் எடுத்தார்கள். மது விலக்கின் நன்மைகளை மக்களிடையே விளக்கி, மதுவின் கொடுமைகளிலிருந்து மக்களைமீட்க, தகுந்த பிரச்சார நடவடிக் கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரையின்படி, மது விலக்குப் பிரச்சாரத் திரைப்படம் ('நீங்க நல்லா இருக்கனும்') ரூ.85 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. ரூ.2 இலட்சம் செலவில் நாடகம் ஒன்று ('வெளிச்சம்') தயாரிக்கப்பட்டு தமிழ் நாடெங்கும் நடைபெற்று வருகிறது.

**சட்டம் ஒழுங்கு நிலைமை**

அமைதிப் பூங்காவாக திகழ்ந்த தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு நிலைமை, மிகப்பெரிய சவாலை எதிர்கொண்ட நேரத்தில்தான் இவ்வரசு பொறுப் பேற்றது. இலங்கைத்தீவிரவாதிகளின் கட்டுப் பாடற்ற பயங்கர நடவடிக்கைகள் முற்றி லுமாக ஒடுக்கப்பட்டன. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் அப்பாவி இலங்கைத் தமிழர்களின் நடமாட்டங்கள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டன. நமது காவல் துறையினருக்கு இலங்கைத் தீவிரவாதி களால் விடப்பட்ட கடுமையான சவால் களைச் சமாளிக்க ஏதுவாக காவல்துறை நவீன மயமாக்கப்பட்டது. எந்தவித சவாலையும் சமாளிக்கும் வகையில் அவர் களுக்குச்சிறந்த பயிற்சியும் நவீன ஆயுதங் களும் வழங்கப்பட்டன. தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை தொடரவிட்டிருந்தால், தமிழகமும் நிச்சயமாக ஒரு காஷ்மீரா கவோ, ஒரு பஞ்சாபாகவோ மாறி யிருக்கும் என்பதைத்தான் ராஜீவ்காந்தி யின் படுகொலை சந்தேகத்திற்கு இட மின்றிச் சுட்டிக்காட்டியது. தமிழகம் தலைசிறந்த மாநிலமாக, அமைதிப் பூங்காவாக, ஒருமைப்பாட்டின் உறைவிட மாகத் திகழ மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளில் காவல்துறையினரின் பங்கு மகத்தானது.

**தொழிற கொள்கை**

இந்தியாவிலேயே முதன்மை மாநில மாகத் தமிழகத்தை கொண்டு வந்தே தீருவது என உறுதிபூண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20.1.1992 அன்று தொழிற்சாலைகளில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி, முதலீடு திரட்டு தல், ஊக்கத் திட்டங்கள், வரிச்சலுகைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்கள் மேம்பாட்டுக்கான ஒரு புதிய தொழிற் கொள்கையை வெளியிட்டார். இப்புதிய கொள்கையினால் தமிழ்நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்குப் பன்மடங்கு பலன் கள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு தொழிற் துறையில் எடுக்கப் பட்ட சில முயற்சிகள் மட்டும் கீழே தரப்பட்டுள்ளன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் ஆண் டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் நிறுவு திறனுடன் கரும்புச் சக்கை

## பொதுமக்கள் அளித்த மனுக்களின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.3.92 முதல் வாரந்தோறும் பொது மக்களை மாவட்டவாரியாகச் சுழல்முறையில் சந் தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்று குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.**



**22.6.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருச்சி மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களிடமிருந்து மனுக் களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் குறை களைக் கனிவுடன் கேட்டு அவைகளுக்குத் தீர்வு காண உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என உறுதியளித்தார்கள்.**

**22.6.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருதய அறுவைச் சிகிச்சைக்காக 3 பேர்களுக்கு ரூபாய் 47,000-மும், மூவலூர் இராமாமிர்தம் நினைவுத் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கு ரூ.5,000-மும், கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 2 பேருக்குத் தலா ரூ.5,000 வீதமும், சலவைத் தொழில் செய்ய, சிறுதொழில் செய்ய 5 பேர் களுக்கு ரூ.22,000 கடன் உதவியும், இரண்டு பேர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனாக ரூ.9,500-ம், 22 பெண்களுக்கு விதவை உதவித் தொகையும் வழங்கினார்கள்.**

**இதுதவிர விதவை சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் இருவருக்கும், நிலப்பட்டா 7 நபர்களுக்கும், மனைப்பட்டா 15 நபர்களுக்கும், மூன்று சக்கர வண்டி 5 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 15 பேர்களுக்கும், தையல் இயந்திரம் 4 பேர்களுக்கும், சலவைப்பெட்டிகள் 5 பேர்களுக் கும், ஊனமுற்றோர் சுயவேலைவாய்ப்பு வங்கிக் கடன் இருவருக்கும், மற்றும் 6 நபர்களுக்கு காலிபர் களும் ஒருவருக்கு காதுகேட்கும் கருவியும் வழங்கப் பட்டன. மொத்தம் 97 பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 22.6.92 அன்று அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.**

யிலிருந்து செய்தித்தாள் தயாரிக்கும் தொழிற்சாலை.

புகளூர் காகிதத் தொழிற்சாலை ரூ.475 கோடி செலவில் விரிவாக்கம்.

மேட்டூரில் 'டிட்கோ' மூலம் கூட்டுத் துறையில் ரூ.159 கோடி மதிப்பீட்டில் தேனிரும்பு தயாரிக்கும் தொழிற்சாலை.

தஞ்சை மாவட்டத்தில் 'டிட்கோ' மூலம் ரூ.75 கோடி செலவில் அலுமினியத் தொழிற்சாலை.

சிவகங்கையில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கிராபைட் சுத்திகரிப்பு ஆலை. இத்திட்டத்தில் ரூ.200 கோடி அளவில் உப தொழிற்சாலைகள் அமைய வாய்ப்பு.

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் உத்தம சோழபுரத்தில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் கூட்டுத் துறையில் 'காஸ்டிக் சோடா' தயாரிப்புத் தொழிற்சாலை.

சிதம்பரனார் மாவட்டம் 'குதிரை மொழித் தேரியில்' இங்கிலாந்து நாட்டு நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் ரூ.450 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு 50,000 டன் டைட்டானியம் டையாக்சைடு தயாரிக்கும் தொழிற்சாலை.

திருநெல்வேலி-கட்டபொம்மன், தஞ்சாவூர், நாகப்பட்டினம்- காயிதே மில்லத், தென்னார்க்காடு, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களில் புதிய சர்க்கரை ஆலைகள்.

**ஆலயத் திருப்பணிக்கோர் அற்புதத் திட்டம்**

தமிழ்நாடு, பழம்பெரும் கோயில்களின் உறைவிடம் ஆகும். ஆனால், ஆயிரக்கணக்கான சிறு கோயில்கள் சிதைந்த நிலையில் உள்ளன. அவைகளில் பெரும்பாலானவற்றில் பல்லாண்டுக் காலமாகத் திருப்பணி வேலை எதுவும் நடைபெறவில்லை. பல கோயில்கள் அன்றாட வழிபாடுகூட நடத்த முடியாத வறிய நிலையில் உள்ளன. இக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யவும் பராமரிக்கவும் பெரும் தொகை தேவைப்படுகிறது. இச்சீரிய பணிக்கு 'முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி' என்னும் நிதியை ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்மானித்தார். இந்த நிதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.1,00,008 வழங்கித் தொடங்கி வைத்தார். மாநில அளவில் தமிழ்நாடு திருக்கோயில்கள் நிர்வாக வாரியமும் மாவட்ட அளவில் குழுக்களும் அமைக்கப்பட்டு இத்திருப்பணி சிறப்பாகச்செயல்பட்டுவருகின்றது.



**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவாக...**

மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவை என்றென்றும் பசுமையாக மக்களின் மனதில் நிலை நிறுத்தும் வண்ணம் பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது.

இதுநாள் வரை 'செங்கல்பட்டு மாவட்டம்' என அழைக்கப் பெற்ற மாவட்டம் இனி 'செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்' என அழைக்கப்பெறும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது.

31.1.1992 அன்று சட்டப்பேரவையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது திருவுருவப் படத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

மெரினா கடற்கரையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சதுக்கத்தை மாற்றியமைக்கும் பணி ரூ.1.25 கோடி செலவில் துரிதமாகச் செயல்பட்டு வருகின்றது.

ஒரு வேளை உணவுகூட இல்லாமல தவிக்கும் ஏழை எளிய மக்களின் நலன் கருதி, நோயற்ற வலிவுள்ள ஒரு புதிய தலைமுறையை உருவாக்கிட, உலகெங்கிலும் பாராட்டைப் பெற்ற சத்துணவுத் திட்டத்தை அளித்தவர் புரட்சித் தலைவர் என்பதைக் கருத்தில் கொண்டு, இதுவரை 'தமிழ்நாடு அரசு சத்துணவுக் கூடங்கள்' என்று அழைக்கப்படுபவை இனிமேல் 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள்' என்று அழைக்கப்படும் என ஆணையிடப்பட்டது.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களைப் பிரித்து, 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று 1.4.92 முதல் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**சிறப்புத்தன்னிறைவுத் திட்டம்**

ஊரகப்பகுதிகளில், சாலைகளை மேம்படுத்துதல், சிறிய நீர்ப்பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல், தெருவிளக்குகளை அமைத்தல், குடிநீர் வசதி, பாசன ஏரிகளைப் புதுப்பித்தல், சத்துணவு மையங்களைக் கட்டுதல், தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



**எழில்மிகு சென்னை - 2000**



சென்னை மாநகரத்தை எழில் கொஞ்சும் நகரமாக விளங்கச் செய்திட 'எழில்மிகு சென்னை 2000' என்னும் திட்டத்தின் கீழ் சீர்மிகு திட்டங்கள் செவ்வனே தீட்டப்பட்டுள்ளன. இதன்கீழ் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றரூ.1,250 கோடி மதிப்பீட்டில் மகத்தான திட்டங்கள் தீட்டப்பட்டுப் படிப்படியாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இதன் முதற் படியாக மூர்மார்க்கெட்டின் புதிய வளாகம் 28.11.91 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்துவைக்கப் பட்டது.

**ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி சேலை**

பொங்கல் திருநாளை முன்னிட்டு 7.1.92 அன்று விழுப்புரத்தில் ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

**'புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம்'**

அனைவருக்கும் சுகாதார நல்வாழ்வு அளிக்க வேண்டும். தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும். நோய்த் தடுப்பு, புது சுகாதாரத் திட்டங்கள் கிராமங்களைச் சென்றடைய வேண்டும். தொழுநோய், காச நோய், கண் நோய் போன்றவைகளைத் தீர்க்க கிராம மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள் செய்துதர வேண்டும், என்ற உயர்ந்த நோக்கங்களுடன் 'புரட்சித் தலைவி மருத்துவத் திட்டம்' 18.1.92 அன்று சென்னையில் முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக நடந்தேறி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பத்தாயிரம் முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதியில் இருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான தெலுங்கு கங்கைத்திட்டம்குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. எஸ். ஜனார்த்தன ரெட்டி அவர்களும் 11.1.92 அன்று புதிய உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர்.இதன்படி சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் கொண்டு வரும் திட்டத்தை 1995- 96-ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிப்பதென ஒப்புக் கொள்ளப் பட்டது. அதிலும் குறிப்பாக 1995-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாக கிருஷ்ணா நதி நீர்சென்னைக்குக்கிடைத்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஒரு இலட்சம் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம்**

பெண்கள் முன்னேற்றத் திட்டத்திற்கெல்லாம் மகுடம் வைத்தது போல, ஒரு இலட்சம் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 3.3.92 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்தார். இதன் மூலம் பெண்களைக் குழுக்களாக ஏற்படுத்தி அவர்கள் தொழில் செய்ய வங்கிக் கடனும் மானியமும் ஏற்பாடு செய்யப்படுவதோடு, மூலப் பொருள்கள் பெறுவதற்கும், உற்பத்தியான பொருட்களை விற்பதற்கும் அரசு ஆங்காங்கே வசதி செய்து தருகிறது. இந்தத் தொடக்க விழாவில், 10,000-க்கும் மேற்பட்ட பெண்களுக்குச் சுய வேலை வாய்ப்பு உதவிகள் வழங்கப்பட்டன. ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் இந்த உன்னத முயற்சி தமிழ் நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்பதில் ஐயமில்லை.

**நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் உதயம்**

நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கீழ்த்தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம்- காயிதேமில்லத் மாவட்டமாக 18.10.91 அன்று உதயமானது. நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். நாகப்பட்டினம்- காயிதேமில்லத் மாவட்டம் தமிழகத்தின் 22-வது மாவட்டமாகும்.

**போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏழு தேசிய விருதுகள்**

சாலைப் போக்குவரத்தில் மிகச் சிறந்த உற்பத்தி செயல்திறன், கிராமப்புற போக்குவரத்துச் சேவை, எரிபொருள் சிக்கனம் ஆகியவற்றிற்காக அகில இந்திய அளவில் வழங்கப்படும் விருதுகளில் இதுவரை எந்த மாநிலமும் புரியாத மாபெரும் சாதனையைத்தமிழகப்போக்குவரத்துக் கழகங்களான 'அன்னை சத்யா', 'சோழன்', 'பட்டுக்கோட்டை அழகிரி', 'இராணி மங்கம்மாள்' ஆகிய போக்குவரத்துக் கழகங்கள் ஏழு விருதுகளைப் பெற்று இந்தியாவிலேயே முதன்மை இடம் பெற்றுள்ளன.

**மகளிர் காவல் நிலையம்**

இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை மாநகரில், முழுக்க முழுக்கப் பெண்களே பணிபுரியும் முதல் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 13.4.92 அன்று கிரீம்ஸ் சாலையில் தொடங்கி வைத்தார்.

**மக்கள் தொடர்பு**

தமிழகத்தின் வேறு எந்த முதல்வரும் இதுவரை ஏற்படுத்திக் கொள்ளாத நேரடி மக்கள் தொடர்பினை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்படுத்திக் கொண்டு ஏழை எளிய மக்களுக்கு நேரிடையாக உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைத்து வருகிறார்கள். 9.3.92 முதல்

வாரந்தோறும் பொதுமக்களைச் மாவட்ட வாரியாகச் சுழல் முறையில் சந்தித்து அவர்களின் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் குறைகளைப் பரிவுடன் கேட்டறிந்து அவர்களின் துயர்துடைக்க நேரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

இந்த மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை எடுத்து, அறுவைச் சிகிச்சைக்காகவும், ஏழைகளின் திருமணச்செலவிற்காகவும், கலப்புத்திருமண உதவியாகவும், சிறு தொழில் தொடங்கவும், விதவைகளுக்கு உதவித் தொகையாகவும், நிலப் பட்டாக்களும், முதியோர்களுக்கும், ஊனமுற்றோர்களும் தேவையான உதவிகள் மற்றும் இதர சமூக நலத்திட்ட உதவிகள் என ஏராளமான உதவிகளை முதல்வர் நேரிடையாக வழங்குவது உண்மையிலேயே ஈடு இணையற்றதாகும்.



**காவிரி நதி தீர்ப்பிரச்சினை**

காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சினை முறைப்படியும், சட்டப்படியும், நியாயப்படியும் தீர்க்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசின் அனுமதியைப் பெறாமலும் தமிழகஅரசின் ஒப்புதலைப் பெறாமலும், கர்நாடக அரசு புதிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தமிழகத்திற்குத் தொடர்ந்து பாதகம் ஏற்படுத்தி வந்தள்ளது. 27 தடவைகள் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளில் முடிவேதும் ஏற்படாததால் பிரச்சினை நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்பட்டது. நடுவர் மன்றத்திடம் தமிழக அரசு இடைக்காலத் தீர்ப்பைக் கோரியது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படி நடுவர் மன்றமும் 25.6.91 அன்று ஒரு இடைக்காலத் தீர்ப்பினை வழங்கியது. இடைக்காலத் தீர்ப்பு முழுத் திருப்தியை அளிக்காவிட்டாலும் உடனடியாக இந்தத் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதைத் தமிழக அரசு வரவேற்றது.

கர்நாடக அரசோ, இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள மறுத்திருப்பது மட்டுமல்லாமல் அதற்கு எதிராக ஒரு அவசரச் சட்டத்தையும் வெளியிட்டது. 'காவிரியில் தண்ணீர் விடவேண்டும்' என்று நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்துவதற்கு இந்த அவசரச் சட்டம் மூலம் தடை விதித்தது. மைய அரசு தலையிட்டு இப்பிரச்சினையில் நியாயம் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு கோரியது. ஆனால், மைய அரசு உச்ச நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டது.

இதற்கிடையில் காவிரி நதி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் தீர்ப்பை மத்திய அரசு தனது அரசிதழில் வெளியிட வேண்டும். அத்தீர்ப்பு இறுதியானது, படுகை மாநிலங்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் அவற்றால் அமலாக்கப்பட வேண்டியதுமாகும். இவ்வுத்தரவு கர்நாடக அரசு நிராகரிப்பது நியாயமற்றதாகும். இதனால் உண்டாகும் சிக்கல்களை எடுத்துரைத்து, மத்திய அரசு அவ்வுத்தரவை தனது அரசிதழில் வெளியிடவும், கர்நாடகம் அவ்வுத்தரவை ஏற்றுச் செயல்படவும் ஆவன செய்யக்கோரி, 5.7.91 அன்று முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்குச் செய்தி அனுப்பினார். தமிழ்நாடு சட்டப்பேரவையில் இதுபற்றிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 11.7.91 அன்று தமிழ்நாட்டைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாரதப் பிரதமரைச் சந்தித்து இடைக்கால உத்தரவை அமல்படுத்த வலியுறுத்தினர். 16.7.91 அன்று முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து இது குறித்து வலியுறுத்திப் பேசினார். மேலும், தமிழக மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொருட்டு தமிழக அரசே மாநிலம் தழுவிய பொது வேலை நிறுத்தத்தை அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் 26.7.91 அன்று அமைதியான முறையில் நடத்தியது.

நடுவர் மன்றத்தீர்ப்பை ஏற்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவிரி நதியிலிருந்து பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு 6 டி.எம்.சி. தண்ணீரை ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் விட வேண்டும் என 31.7.1991 அன்று உத்தரவிட்டார்.

22.11.91 அன்று உச்ச நீதிமன்றம் 'காவிரியில் 205 டி.எம்.சி. நீர் திறந்து விட வேண்டும்' எனத் தீர்ப்புக் கூறியது. 'கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது' என்று கூறியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்றது முதல் எடுத்த பல்வேறு தீவிர நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றியே இது என அனைவராலும் பாராட்டப்பட்டது.

காவிரி நதிநீர்ப் பங்கீடு சம்பந்தமாக நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பினை அரசிதழில் வெளியிட வேண்டுமென முதல்வர் அவர்கள் 3.12.91 அன்று அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் டெல்லி சென்று பிரதமரைக் கேட்டுக் கொண்டார். முதல்வரின் கோரிக்கையை ஏற்று பிரதமர் அவர்கள் நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து, கர்நாடகத்தில் வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அவர்களுக்கு இழைக்கப்பட்ட தாங்கொண்ணாக் கொடுமைகளின் காரணமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் தமிழகம் நோக்கி ஓடி வந்தனர். அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் தமிழக அரசு தாயுள்ளத்துடன் செய்தது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் விடாமுயற்சியின் காரணமாக கர்நாடகத்தில் அமைதி திரும்பியது. திக்கற்று தமிழகம் ஓடிவந்த அப்பாவித் தமிழர்கள் கர்நாடகம் திரும்பினார்கள்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி, தமிழக முதல்வர்களுடன் பிரதமர் அவர்கள் 17.2.92 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து நிலைமைகள் ஓரளவு சீரடைந்தாலும் நதிநீர்ப் பங்கீடு பிரச்சினையில் ஒரு தீர்வும் ஏற்படவில்லை.

**புரட்சித் தலைவி அவர்களுக்கு டாக்டர் பட்டம்**

உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமை நடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம், இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக்கிடையே பூரலம் அமைத்துள்ள விழுமிய ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத்தளையினின்று மனித உணர்வுகளை விடுவிக்கும் எண்ணங்களுடன் இடையறாது செயல்படும் பாங்கினுக்காகவும், சமுதாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும், தமிழனத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச்சிந்தனை

களை எடுத்துக் கூறும் தெளிவினுக்காகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு 19.12.1991-ஆம் நாள் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் 134-வது பட்டமளிப்பு விழாவில், டாக்டர் பட்டம் வழங்கப் பட்டது.

**முடிவுரை**

தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு இதுவரை ஏற்படாத மகத்தான சவாலை இலங்கைத் தீவிரவாதிகள் முன்வைத்த, மிகவும் சோதனையானதொரு காலகட்டத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். தமிழகத்தை மற்றொரு பஞ்சாபாக மாற்ற எத்தனித்த கொடுமையான தீவிரவாத நடவடிக்கைகளை இரும்புக் கரம் கொண்டு நசுக்கினார். புரட்சித் தலைவி அவர்களால் தமிழகம் மீண்டும் அமைதிப் பூங்காவாக மலரத் துவங்கியது. எந்த ஒரு பொருளாதாரப் புரட்சிக்கும் அமைதியான சூழ்நிலை இன்றியமையாததாகும். அந்தச் சூழ்நிலையை அமைத்தவுடன் புதிய தொழில் கொள்கையினை அறிவித்து, தமிழகத்தில் மகத்தானதொரு தொழில் புரட்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். தொழில் மயமாக்கத்திற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து, அதன் வளர்ச்சிக்கு சுமூகமான சூழ்நிலையை ஏற்படுத்தி முன்னேற்றப்பாதையில் தமிழகத்தைப் படுவேகமாக கொண்டு செல்லும் பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும். தமிழகத்தை ஆண்ட எந்த ஒரு முதல் அமைச்சரும் சந்தித்திராத புதிய புதிய சவால்களையும், இன்னல்களையும் சிக்கல்களையும் இந்தப் பெண் முதல்வர் சந்திக்க நேரிட்டது. சரியான நேரத்தில் தீவிரவாதத்தை ஒடுக்கித் தமிழகத்தைப் பேராபத்திலிருந்து காப்பாற்றி இரும்புப் பெண்மணி என்று பெயரெடுத்தார். இவரது நடவடிக்கையால் தமிழகம் எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுப் புகழாமல், தமிழக வரலாற்றினை எழுதி விட முடியாது. தமிழகம் முன்னேற்றப் பாதையில் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருந்தாலும், சரியான நேரத்தில், சரியான பாதையில், மிகச் சீரிய தலைமை யேற்று, தமிழகத்தை நடத்திச் செல்கிறார் புரட்சித் தலைவி என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. தமிழகத்தின் பொற்காலம் தொடங்கி விட்டது. அரசியல் பொருளாதார சமூகத் துறைகளில் மாபெரும் புரட்சிகள் நடைபெறத் துவங்கி ஓராண்டாகிவிட்டது. இந்த மாபெரும் மறுமலர்ச்சியில் நமது பங்கைத் தவறாமல் செலுத்திட நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோம். இரண்டாயிரமாவது ஆண்டு துவக்கத்தில், செல்வம் செழித்தோங்கும் சுதாகலமான தமிழகத்தை உருவாக்க உறுதி பூண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் கரங்களை வலுப்படுத்துவோம்!



அறிவியல் விந்தை:

# பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் எரியக் கூடிய மின்சாரப் பல்பு!

பதினான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடித்து எரியக் கூடிய மின்சாரப் பல்பு ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வழக்கமான இதரப் பல்புகள் பயன்படுத்தும் மின்சக்தியில், 75 சதவீதத்தைத் தான் இந்தப் பல்பு பயன்படுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் புதிய பல்புக்கு என்ன பெயர் தெரியுமா? 'இ-லாம்ப்'.

வாஷிங்டனில் எடிசன் மின்சாரக் கழகத்தின் ஆண்டுக் கூட்டம் ஜூன் முதல் தேதியன்று நடந்தபோது, இந்தப் புதிய பல்பு அறிமுகப்படுத்தப்பட்டது. கலிபோர்னியாவைச் சேர்ந்த 'இன்டர் சோர்ஸ் டெக்னாலஜீஸ் ஆஃப் சன்னிவேல்' என்னும் நிறுவனம் இந்தப் புதிய பல்பை உருவாக்கியுள்ளது.

இந்தப் பல்பு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் மணி நேரம் வரையில் எரியும் திறன் படைத்ததாகும்! அதாவது தினசரி 4 மணி நேரம் எரியவிட்டால், பத்திலிருந்து பதினான்கு ஆண்டுக்காலம் வரைக்கும் இந்தப் பல்பு உழைக்குமாம்! இதர சாதாரணமான பல்புகள் 750 முதல் 1,500 மணி நேரமே எரியும் திறன் படைத்தவை. அதாவது 6 மாதம் முதல் ஓராண்டுக் காலம் வரையிலேயே இவை உழைக்கும்.

இந்தப் புதிய பல்பு மிகவும் சிக்கனமானதாகும். பல ஆண்டுகளுக்கு இந்த ஒரே பல்பைப் பயன்படுத்துவதன் மூலம், அடிக்கடி பல்புகளை மாற்றும் செலவு குறையும். இதன் மூலம் ஒரு பல்புக்கு 50 டாலர்கள் முதல் 100 டாலர்கள் வரையில் மிச்சம் பிடிக்க முடியும்.

அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் இந்தப் புதிய பல்பு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த சில ஆண்டுகளிலேயே இந்தப் புதிய எலெக்ரானிக் பல்பு மிகவும் பிரபலமடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீடுகளிலும், கடைகளிலும் சர்வசாதாரணமாக இது பயன்படுத்தப்படக்கூடும்.

## இது எப்படி எரிகிறது?

வெண்ணிற ஒளியுடன் பிரகாசிக்கும் சாதாரணமான பல்புகளுக்குள் கம்பியொன்று இருக்கிறது. மின்சாரம் இந்தக் கம்பி வழியாகப் பாயும்போது அந்தக் கம்பி பிரகாசிக்கத் தொடங்குகிறது. இதனால் வெளிச்சம் பரவுகிறது. இந்தச் சாதாரண விளக்கை 1879-ஆம் ஆண்டில் தாமஸ் ஆல்வா எடிஸன் கண்டுபிடித்தார்.

நீல நிற ஒளியைப் பாய்ச்சுகின்ற டியூப் லைட்களின் உள்ளே ஒருவித வாயு அடைக்கப்பட்டுள்ளது. டியூப் லைட்டின் உள்ளே இருக்கும் எலெக்ட்ரோடுகள் இந்த வாயுவை ஒளிரச் செய்கின்றன.

இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'இ-லாம்ப்'பிலும் இதே வாயுதான் அடைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பல்பினுள், இதர சாதாரண பல்பில் உள்ளது போன்ற கம்பியோ, அல்லது டியூப் லைட்டில் உள்ளது போன்ற எலெக்ட்ரோடுகளோ ஏதுமில்லை. இந்தப் பல்புக்குள் ஒரு காந்தக் கம்பிச்சுருள் வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி உயர் அலைவரிசை கொண்ட ரேடியோ சிக்னல்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த ரேடியோ சிக்னல்கள் பல்புக்குள் இருக்கும் வாயுவோடு கலந்து வினைபுரியும்போது, ஒருவிதப் 'பிளாஸ்மா' உருவாகிறது. இந்தப் பிளாஸ்மாவானது பல்புக்கு உள்ளே பூசப்பட்டிருக்கும் பாஸ்பரஸ் மீது பட்டதும் ஒளி ஏற்படத் தொடங்குகிறது.

சாதாரண ஹோல்டர்களிலேயே இந்த பல்பைப் பொருத்த முடியும். இதரச் சாதாரண பல்புகளைப் போன்ற நல்ல ஒளியை இந்தப் பல்பும் தருகிறது. ஆனால், இதரப் பல்புகளைக் காட்டிலும் மிகவும் குறைவான உஷ்ணத்தையே இது உண்டாக்குகிறது.

—அமெரிக்கத் தகவல் நிலையம்


தமிழரசு

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தமிழ் .......... | ஓராண்டு | = ரூ. 24 |
| | அரையாண்டு | = ரூ. 12 |
| ஆங்கிலம் ... | ஓராண்டு | = ரூ. 12 |

(அரையாண்டுச் சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் : தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# நகர் ஊரமைப்பு நலப் பணிகள்

“ உள்ளாட்சித் துறையின் ஓர் அங்கமான நகர்-ஊரமைப்புத் துறையின் இந்த ஓராண்டுக் காலச் சாதனைகள் பற்றி இக் கட்டுரையில் விவரிக்கப்படுகிறது. ”

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு மலர்ந்து ஓராண்டு காலமாகிறது. இந்தக் குறைந்த காலத்திலேயே நிறைந்த பணிகளையாற்றிப் பெருமைகொண்டிருப்பது நகர்-ஊரமைப்புத் துறை.

இத்துறை கீழ்க் கண்டுள்ள மூன்று முக்கியப் பணிகளைச் செயலாற்றி வருகின்றது.

1. மண்டலத்திட்டம், முழுமைத் திட்டம் மற்றும் விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பது மற்றும் கட்டடங்கள் கட்டுவது தொடர்பான மேல்முறையீடுகளில் தீர்வு காண்பது போன்ற சட்ட பூர்வமான பணிகள்.

2. மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறிய மற்றும் மத்திய நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற திட்டங்களில் நகரங்கள் மற்றும் நகராட்சிகளுக்குத்தக்க உதவியளிக்கும் வளர்ச்சிப் பணிகள்.

3. மனைப் பிரிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கூடங்களுக்குத் திட்ட அனுமதி வழங்குதலில் தக்க ஆலோசனைகள் தெரிவிப்பது.



★ மனிதனின் எல்லா உலகங்களையும்விடப் பெரியது மனம். அது, பண்புக்கேற்றபடி பெரிதாகத் தக்கது நினைவுக்கேற்றபடி குறுகத் தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

—அறிஞர் அண்ணா

#### சட்டபூர்வமான திட்டங்கள் தயாரிப்பது

இத்துறை கடந்த ஓராண்டில் கீழ்க்கண்டுள்ள 11 நகரங்களுக்கு முழுமைத்திட்டம் தயாரித்து, அவைகளை அரசின் ஒப்பளிப்பிற்காக அளிக்கப்பட்டுள்ளன.

ஆத்தூர், காஞ்சிபுரம், மதுராந்தகம், கோயம்புத்தூர், கொடைக்கானல், வேலூர், கடையநல்லூர், பல்கலை நகர், மேலூர், மணப்பாறை, கோபிச்செட்டிப்பாளையம்.

இவற்றில் ஆறு முழுமைத் திட்டங்களுக்கு அரசு இசைவு/ஒப்பளிப்பு அளித்துள்ளது. எஞ்சிய 5 திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

இத்துறை பலநகரங்களுக்கான 23 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து, அவற்றிற்கு இசைவு அளித்துள்ளது. மற்றும் 17 விரிவு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இறுதி ஒப்புதலும் அளித்துள்ளது.

#### வளர்ச்சிப் பணிகள்

மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறிய மற்றும் மத்திய நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் இம்மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி உதவிகளை இத்துறை அளித்து வருகின்றது. சிறிய மற்றும் மத்திய ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.177.68 இலட்சங்கள் செலவில் 15 திட்டப் பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், நடப்பு ஆண்டில் ரூ.238.70 இலட்சங்கள் முதலீட்டில் 11 திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தொடங்கப்பட்டுள்ள இத்திட்டப் பணிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.235.93 இலட்சங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் ரூ.606.75 இலட்சங்கள் முதலீட்டில் 40 வளர்ச்சிப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் ரூ.296.82 இலட்சங்கள் முதலீட்டில் 16 வளர்ச்சிப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. தொடங்கப்பட்டுள்ள இத்திட்டங்களுக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.466.64 இலட்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

#### ஆலோசனை மற்றும் அறிவுறுத்தும் பணிகள்

கடந்த ஓர் ஆண்டில் இத்துறை 61,758 மனைகள் அடங்கிய 570 மனை உட்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**பிற பணிகள்**

வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதில் நகர வான் வழிப்படங்கள் மற்றும் செயற்கைக் கோள் வழிப்படங்கள் போன்ற நவீனமான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வருகின்றது. நகர வான் வழிப்படங்கள் ஆறு நகரங்களுக்கும் மற்றும் மலைப்பிரதேசமான உதக மண்டலத் திற்கும் எடுக்கப்பட்டு அவைகள் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிப்பதில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இத்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் தொழில் நுட்பத் திறனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்குத் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

பழம் பெருமை வாய்ந்த நகரங்களின் இயற்கை அழகைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் இந்நகரங்களில் நில உபயோகங்கள் பலவகையாகப் பிரிக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கொள்கையின் அடிப்படையில் கொடைக்கானல் நகரத்திற்கான முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் உதக மண்டலம், குன்னூர், வால்பாறை மற்றும் ஏர்க்காடு போன்ற நகரங்களிலும் முறையான நில உபயோகங்களுக்கான வழிவகை செய்யப்பட்டு வருகின்றது. மைய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறிய மற்றும் மத்திய நகரங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சரித்திரப் புகழ் வாய்ந்த மாமல்லபுரம் நகரத்திற்கான பல வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த வழி வகை செய்யப்பட்டுள்ளது.

மாநில ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள 40 நகரங்களில் 1991-92-இல் நிறைவேற்றப்பட்டுவரும் - வணிகமையம், அங்காடி, கடைகள், பேருந்து நிலையம், பூங்கா, நாளங்காடி போன்றவற்றிற்காக, அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகை 606.75 இலட்சம் ரூபாயாகும்.

> ● புத்தகங்கள் காலம் என்னும் கடலின் கரையில் நிறுத்தப்பெற்றுள்ள கலங்கரை விளக்கங்கள்.
>
> —இ.பி.விப்பிள்

மேலும் - மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் பல மாவட்டத்தையும் சேர்ந்த 16 நகரங்களில் - சமுதாயக் கூடம், பேருந்து நிலையம், வணிகமையம், கடைகள், அங்காடி மேம்பாடு போன்ற பல திட்டப் பணிகளுக்காக ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.296.82216 இலட்சமாகும்.

அதே நேரத்தில் - இந்த வகையில் நகருக்குக் கிடைக்கும் மைய அரசின் உதவி பற்றியும் நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

மைய அரசு நிதியுதவியோடு 1991-92-இல், சிறிய மற்றும் மத்திய தர நகரங்கள் 15-இல், ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் - பேருந்து நிலையங்கள், சந்தைகள் ஆகிய திட்டப்பணிகள் நிறைவேற 277.48 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

# குழந்தைகள் கலை விழா



கோடை விடுமுறையை முன்னிட்டும், குழந்தைகளுக்குச் சுற்றுலா, தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு பற்றி விழிப் புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரையின் பேரில் கடந்த மே மாதம் 22 முதல் 24-ஆம் தேதி வரை 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்', ''குழந்தைகள் கலை விழாவை'' (Children's Carnival) நடத்தியது.

பொதுமக்களிடமும், குழந்தைகளிடையேயும், பெரிய வரவேற்பைப் பெற்ற இவ்விழாவினைத் தொடர்ந்து விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறக்கும் இச்சமயம் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வண்ணம் 'புத்தக விழா' ஒன்றைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்த வேண்டும் என்று அறிவுரை வழங்கியதன் பேரில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஜூன் 26 முதல் 30-ஆம் தேதி வரை சென்னை தீவுத்திடலில் புத்தக விழாவை நடத்தியது. சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் முதல் 'புத்தக விழா' (Book Fair) இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

இப்புத்தக விழாவில் பள்ளி சிறார்க்கும், கல்லூரி மாணவ மாணவியருக்கும் தேவையான புத்தகங்கள், புத்தகப் பை, எழுது பொருட்கள், இதரப் பொருட்களும் கண்காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டன. தமிழ்ப் புத்தக விற்பனையாளர்களுக்குக் குறைந்த வாடகையில் இடம் தரவும், சில வகையான புத்தகங்களைக் குறைந்த விலையில் விற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஐந்து நாட்கள் நடந்த இவ்விழாவில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் பல்திறனை ஊக்குவிக்கும் பொருட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகளும், பட்டிமன்றங்களும் நடத்தப் பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பரிசுகளை வழங்கியது.

# கூட்டுறவுத் துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள்

**கிராமப் பகுதிகளில் நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு இயக்கம் பெரும்பங்கு வகிக்கிறது. பயிர்க்கடன், சிறு வியாபாரிகளுக்குக் கடன், குறுகிய கால நடுத்தரக்கால விவசாயக் கடன்கள், நகைக் கடன்கள், பண்ணை சாராக் கடன்கள் போன்ற பல்வேறு கடன்களை வழங்கி ஏழை எளியோர் வாழ்க்கைத் தரம் உயர வழி வகுக்கிறது கூட்டுறவு இயக்கம்.**

தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் கடந்த எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக, மக்களின், குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ஒரு முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது. தமிழகத்தில் உள்ள பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் பல தரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களுக்குப் பணியாற்றி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பிற துறைகளிலும் ஈடுபட்டு மக்கள் தொகையின் எல்லாப் பிரிவினருக்கும் பலனளித்துள்ளன.

**உடனடி கடன் வழங்கும் திட்டம்**

கடன் வழங்கல் நடைமுறையை எளிதாக்கவும், கடன் தவணைதவறாத உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களைத் துரிதமாக வழங்குவதை உறுதிப்படுத்தவும் நடப்பு ஆண்டில் எல்லாத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் உடனடி கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்குதல்**

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் (நாபார்டு) வழி முறைகளின் படி, வழங்கப்படும் மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 சதவீதம் நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன.



## சிறு வியாபாரிகளுக்குக் கடன்

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு உதவி புரிய அதிக பட்சமாக ரூ.500 வரை ஒருவருக்குத் தேவையின் அடிப்படையில் சிறு கடன்கள் வழங்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு, தேவை அடிப்படையில் சிறு கடன்கள் வழங்கல் என்ற சிறப்புத் திட்டச் செயலாக்கம் குறித்து கூர்ந்து ஆராய ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் ஒரு மகளிர் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில், நகரக் கூட்டுறவு வங்கிகளும் இவ் வகைக் கடன்களை வழங்க கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் 4,371 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ.17.74 இலட்சம் அளவிற்கு, மேலே குறிப்பிட்ட கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.

## கடன்கள் வழங்குவதற்கான நிலவள வங்கிகட்குப் புதிய வழிகள்

பால்பண்ணை, ஆடுவளர்ப்பு, கோழிப் பண்ணை ஆகிய பல தரப்பட்ட காரியங்களுக் காகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் கீழ். மட்டும் இந்நாள் வரை நிலவள வங்கிகள் நாபார்டு உதவியுடன் கடன்களை வழங்கி வந்தன. நிலைமையை அனுசரித்து தொடக்க நிலவள வங்கிகள் பிற இனங்களுக்கும் பின்வருமாறு கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

## பண்ணை சாராப் பிரிவுகட்குக் கடன் வழங்கல்

நாபார்டினால் அறிவிக்கப்பட்டுள்ள உதவித் திட்டத்தின்படி கிராமக் கைவினைஞர் கைத்திற னாளர்கள் மற்றும் சிறிய அளவிலான வாணிபம் செய்பவர்கட்குப் பண்ணைச் சாராக் கடன் திட்டத் தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டு முதல் நிலவள வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன. இவ்வகை நிதியுதவி கிராமமக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அளித்து அதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்து பயன் அளிப்பதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவியை விரிவடையச் செய்யவும் உதவுகிறது. நாபார்டினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடன் வழங்கு நெறி முறைகளைக் கடைப்பிடிக்காது நிலவள வங்கிகள் இத் திட்டத்திற்குக் கடன் வழங்கலாம் என்பதும், அவ்வாறு வழங்கப்படும் கடன் அளவில் 100 சதவீதம் அளவிற்கு நாபார்டு மறு நிதியுதவி செய் வதும் இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத் திட்டத்தின் கீழ் தனி நபர் ஒருவருக்கு அதிகப் பட்சமாக ரூ.50,000 கடன் வழங்கலாம் என நிர் ணயம் செய்யப்பட்டுள்ளது.

1991-92-ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டதிற்கெதிராக 1991-92-இல் நிலவளவங்கிகள்ரூ.3.84 கோடி அளவிற்குத் கடன் வழங்கியுள்ளன.

> உலகத்திலேயே மிகவும் மலிவான பொருள் அன்புதான், அது தன்னைப் பெறுபவனுக்கும் வழங்குபவனுக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும்.
>
> —இங்கர்சால்

## விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் திட்டம்

விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் பொருட்டு ஊக்கத்திட்டத்தினைச் செயல்படுத்த கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசாணை எண். 231-இல் அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி கூட்டுறவுக் கடன்களைப் பெற்றுள்ள அனைத்துக் கடன்தாரர் களும் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களின் 1.7.1991 அன்றுள்ள தவணை தவறிய நிலவையின் அசலை 30.6.1992-க்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். மேலும், 1.7.1991 முதல் 30.6.1992 வரை திருப்பிச் செலுத்த வேண்டிய எல்லா நிலுவைகளையும் திருப்பிச் செலுத்த வேண்டும். அந்த மாதிரியான விவசாயி களுக்கு 1.7.1991 அன்றுள்ள தவணை தவறிய வட்டி அபராத வட்டிக்குச் சமமான தொகையை அரசு ஊக்கத் தொகையாக வழங்கும் இந்த ஊக்கத் திட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்லாக் கடன்களுக்கும் பொருந்தும். ஆனால் நகைக் கடன்கள் மற்றும் பண்ணை சாராக் கடன்களுக்கும் இத்திட்டம் பொருந்தாது.

இந்த ஆணை வழங்கப்படுவதற்கு முன்னர் அல்லது 1.7.1991-க்குப் பிறகு கடனாளிகள் 1.7.1991-இல் உள்ள தவணை தவறிய வட்டி மற்றும் அபராத வட்டியைத் திருப்பிச் செலுத்தி இருந்தால் அவர்களுக்கும் இந்த ஊக்கத் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள 13 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தால் பயனடைவர் என எதிர் பார்க்கப்படுகிறது. மாநில அரசுக்கு இத்திட்டத் தினால் ரூ.69.07 கோடி செலவாகும்.

## கூட்டுறவுத் துறையின் முக்கியப் பணிகளின் முன்னேற்றம்

கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகள் விவசாயக் கடன்கள் வழங்குதல், நகைக் கடன்கள் வழங்குதல் பண்ணை சாராக் கடன்கள் வேளாண்மை இடுபொருள் விநியோகம் வேளாண் விளைபொருள் விற்பனை நுகர்பொருள் விநியோகம் மற்றும் கிடங்கு கட்டுதல் ஆகியவை யாகும்.

1991-92-ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகள் அனைத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

# வனவளம் காப்போம்

வனச் செல்வங்களைப் பாதுகாக்கவும், வன வளத்தை மேம்படுத்தவும், தமிழக அரசு பல்வேறு முக்கியத் திட்டங்களைத் தீட்டி சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

வனத்தைப் பாதுகாப்போம்.
வனச் செல்வங்களைப் பாதுகாப்போம்
வனச் செல்வங்களைத் திருடுவோரைக்
கடுமையாகத் தண்டிப்போம்.

என்ற கோட்பாடுகளுடன் திறம்படச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் நிலப்பகுதி 1,30,057 சதுர கி.மீ. ஆகும். இதில் வனப்பகுதி 22,698.51 சதுர கி.மீ. ஆகும். தேசிய வனக்கொள்கைப்படி, குறைந்தது 33 சதவீதம் வனப்பகுதி இருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கையில், தற்போதைய வனப்பகுதி சுமார் 17.45 சதவீதம் மட்டுமே ஆகும். பல்வேறு திட்டப் பணிகளுக்காக 1991-92-இல் ரூ.4,302.71 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. பாதுகாப்பு, புதுப்பித்தல், உற்பத்தி, சமுதாயக் காடுகள், முன்னிலைக் காடுகள் போன்ற ஐம்பெரும் பிரிவுகளாக வனத்திட்டங்கள் பிரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. கீழ்க் கண்ட திட்டங்கள் வனத் துறையால் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| மாநில மண் வளப் பாதுகாப்பு | ரூ.116.26 இலட்சங்கள் |
| மாநிலக்காடு வளர்ப்புத் திட்டம் | ரூ.3,334.11 இலட்சங்கள் |
| மத்திய அரசு பொறுப்பேற்பவை | ரூ.134.06 இலட்சங்கள் |
| மத்திய அரசு பொறுப்பேற்பவை (50:50 அடிப்படையில்) | ரூ.273.51 இலட்சங்கள் |
| தன்னாட்சி நிறுவனங்கள் — மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | ரூ.224.75 இலட்சங்கள் |
| மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் | ரூ.220.02 இலட்சங்கள் |
| மொத்தம் | ரூ. 4,302.71 இலட்சங்கள் |

**“ வன வளமே சமுதாய வளத்துக்கும், நலத்துக்கும் அடிப்படையாய் விளங்குகிறது. வனத்துறை பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் நம்முடைய வனவளம் காப்பாற்றப்படுகிறது. ”**

1992-93-இல் ரூ.5,045 இலட்சம் செலவில் திட்டப்பணிகள் வனத் துறையால் செயல்படுத்தப் படும். 1991-92-இல் 44,000 எக்டேர் பரப்பில் காடு வளர்த்தல் 18,000 எக்டேர் பரப்பில் விமானங்கள் மூலம் விதைகளைத்



தூவுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1992-93-இல் 1,70,000 ஏக்கர் (68,000 எக்டேர்) பரப்பளவில் பலவேறு வனத் தோட்டங்கள் அமைக்கப்பட உள்ளன.

வனச் செல்வங்களைப் பாதுகாக்க நவீன ஆயுதங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள், வானகங்கள் வாங்க ரூ.70 இலட்சம் 1991-92-இல் ஒதுக்கப்பட்டு அவைகளை வாங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமுதாய நலக்காடுகள் திட்டம் 1981-82 முதல் சுவிடன் நாட்டு உதவியுடன் மக்களோடு இணைந்த காடுவளர்ப்புப் பணிகளுக்காக தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், மலைவாழ் மக்கள் நலத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. புறம்போக்கு மற்றும் ஒதுக்கு நிலங்களில் மக்கள் பயன்படும் வகையில் கிராமப் பகுதிகளிலும் சமூக நலக்காடு வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. முதல் கட்டப் பணிகள் ரூ.57 கோடி முதலீட்டில் 1.38 இலட்சம் எக்டேர் பரப்பளவில் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டப் பணிகள் (1988-93) ரூ.85.40 கோடி செலவில் காடு வளர்ப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. புன்செய் நிலங்கள், வேளாண்மைக் காடுகள், மரப்பட்டாத் திட்டம், சமுதாய தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், இடைமுகத் தளக்காடு வளர்க்கும் திட்டம், விதைநாற்று உற்பத்தி விரிவாக்கத் திட்டம், ஆராய்ச்சி, பயிற்சி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சந்தன மரக்கடத்தலைத் தடுப்பதற்காகப் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திட்டமிட்ட வனப்பாதுகாப்புப் பணி தொடங்கப்பட்டு 1991-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 2,385 சந்தன மரக் கடத்தல் குற்றங்களைக் கண்டுபிடித்து ரூ.1,147.08 இலட்சம் மதிப்புள்ள 734 டன் சந்தனமரம் கைப்பற்றப்பட்டுள்ளது. ஏனைய வனக்குற்றங்கள் 1991- ஆம் ஆண்டு முடிய மொத்தம் 37,710 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ.413 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. காடுகளில் திருட்டுத்தனமாக மரம் வெட்டுதலைத் தடுக்கும் பொருட்டு மொத்தம் 7 விறகு மண்டிகள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

1991-92-இல் 1,012 டன் சந்தனக் கட்டைகள் பொது ஏலத்தில் விற்கப்பட்டு ரூ.2,300 இலட்சம் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.

வனக் குற்றங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட 618 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் ஏப்ரல் மே மாதம் வரை 640 நபர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் வனக்குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே காலக் கட்டத்தில் 20 நபர்கள் குண்டர்கள் சட்டத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1990-91-இல் சந்தனமரக் கடத்தல் குற்றத்திற்காக நான்கு பேர் மட்டுமே குண்டர்கள் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். 1990-ஆம் ஆண்டு இறுதியில் இத்துறையில் 320 வாகனங்கள் மட்டுமே



இருந்து வந்தன. 1991-92-ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் செலவில் 168 வாகனங்கள் (129 மோட்டார் சைக்கிள், 39 ஜீப்) போன்றவை வாங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. 1992-93- இல் மேலும் சில வாகனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வனத்துறையின் கீழ் 3 வனக்கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் ரூ.60 கோடி அளவில் 7,800 ஏக்கர் பரப்பளவில் தேயிலை வளர்க்கும் திட்டம் வகுக்கப்பட்டு 1991-92-இல் 330 ஏக்கர் (131 எக்டேர்) நிலத்தில் தேயிலை நடப்பட்டுள்ளது. இதன் செயல்திறன் 2,450 இலட்சம் அளவிற்கு வளர்ந்து 1992-93-இல், 2,470 இலட்சம் அளவிற்கு அதிகரிக்கும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

2. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தில் உயர் விளைச்சல் தரும் கூழ்மரத் தோட்டம் வளர்க்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு 1991-92-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. நபார்டு வங்கி கடனுதவி தர முன் வந்துள்ளது. இதன் செயல்திறன் இந்த ஆண்டில் 748 இலட்சம் அளவுக்கு வளர்ந்து 1992-93-இல் 860 இலட்சம் அளவுக்கு உயரும். 1991-92-இல் 12,875 ஏக்கர் (5,180 எக்டேர்) உயர் விளைச்சல் தரும் கூழ் மரத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டு 1992-93-இல் 12,500 ஏக்கர் (5,000 எக்டேர்) அளவில் வளர்ச்சிப் பணி தொடங்கும்.

3. அரசு ரப்பர்க் கழகம் 1991-92-இல் 944 இலட்சம் அளவுக்குச் செயல்திறன் வளர்ந்து 1.056 இலட்சம் அளவுக்கு உயரும் நிலையில் வளர்ந்துள்ளது. ரப்பரின் விற்பனை விலை குறைந்ததால் ரப்பர் பொருட்களின் தேக்கம் உள்ளது. ஆயினும் அவற்றைச் சீர்திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவாய் அதிகரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மேற்கண்ட திட்டப் பணிகளுடன் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் 7 ஆண்டு காலத்தில் 45,000 எக்டேர் பரப்பளவில் வனத் தோட்டங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு 1991-92-இல் 5 தோட்டங்கள் நிறுவப்பட்டு நாற்றங்கால் அமைத்தல், உபகரணங்கள் வாங்குதல் போன்ற பணிகள் செயல்படுகின்றன. 45,000 எக்டேர் பரப்பளவில் ரூ.117 இலட்சம் செலவில் தாழ்ந்த வனப்பகுதிகளில் வான்வழி விதைத் தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வண்டலூரில் வன ஆராய்ச்சி



**★ மக்களாட்சிச் சிறப்புக் கொண்ட இந்திய நாடு, என்றென்றும் இதே புகழோடு திகழவேண்டுமெனில், நமக்குள் போட்டி பொறாமைகளை வித்திட்டு வேதனைகளை வளர்ப்பதைத் தவிர்த்து, ஒற்றுமை உணர்வோடு, ஒருமைப்பாட்டைப் பேணிக்காப்பது ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமை ஆகும்.**

மையம் அமைக்கப்பட்டு 1991-92-இல் ரூ.17.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு 1992-93-இல் மேலும் 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வனக்கொள்கையைக் கருத்தில் கொண்டு தமிழகத்தில் உள்ள வாழ்க்கைச் சூழலை மேம்படுத்த வனங்களையும் தரிசு நிலங்களையும் பசுமையாக்குவதே அரசின் முழு முயற்சியாக இருக்கும். பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை முறைப்படுத்தி 10 ஆண்டுகளில் முடிப்பதன் மூலம் நமது திட்ட அணுகுமுறை சிறப்பாக அமையும்.

அனைவரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த நம் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு அடிப்படைத் தேவைகளான உணவு, உறைவிடம், உடை ஆகியவற்றிற்கு நிலையான வருமானம் கிடைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராம மக்களுக்கு காடுகள் மூலம் நேரிடையாகவோ மறைமுகமாகவோ வேலைவாய்ப்புகள் கிடைக்கவழிவகை செய்யப்படுகின்றன. தனியார் நிலங்களில் பசுமைப் புரட்சி செய்யும் நோக்கில், சமூக காடுகளை வளர்க்கத்தேவையான தொழில் நுட்பம், விதைகள் வழங்கும் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. கோயில் நிலங்கள், நிறுவன நிலங்கள், சமூக நிலங்கள் போன்ற பகுதிகளில் காடுகள் வளர்க்கும் பணி சுவிடன் நிதி உதவியுடன் கூடிய திட்டங்கள் மூலமும் நபார்டு வங்கயின் உதவியுடனும் தேவையான கடன் வசதிகள் தனியார்கள் பெற அரசு ஒத்துழைப்புத்தரும்.

எனவே, மிகுந்த அளவில் காடுகள் வளர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வளர்ந்து நாட்டுக்கும், குறிப்பாக கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க வழிவகைகள் செய்யப்படும்.



# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! "முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்".

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.

**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்
மணலி, சென்னை 600 068

HTA 8249



## கானகம் தரும் பாடம்!

—இரா. இரகுபதி



கோடி கோடிப் பறவைகள்
காட்டில் வாழுது — அவைகள்
நாட்டில் வாழும் மனிதருக்குப்
பாடம் சொல்லுது!

இனிய இனிய தேனீக்கள்
கூடு கட்டுது — அது
இதய முள்ள மனிதருக்கும்
இனிமை ஊட்டுது!

அழக முகாய்ப் பூச்செடிகள்
ஆட்டம் போடுது — நல்
ஆனந் தத்தை மனிதருக்கு
அள்ளி வழங்குது!

துள்ளித் துள்ளி அருவிகள்
தொடர்ந்து பாயுது — அரும்
தூய்மைதனை மனிதருக்குத்
துலக்கிக் காட்டுது!

கோப தாப விலங்குகளும்
கூடி மகிழுது — என்றும்
கூட்டு றவின் மேன்மையினைக்
காட்டி வாழுது!

## அறிவுச் சுடர்

★ உலகத்திலேயே மிகவும் குளிரான பகுதி எது?

ரஷ்ய நாட்டின் சைபீரியாவிலுள்ள ஓயம்யா கோன் என்ற கிராமம்.

★ இந்தியாவில் பழமையான நிலக்கரிச் சுரங்கம் எங்கு உள்ளது?

வங்காளத்தில் ராணிகஞ்ச் என்ற சுரங்கம்.

★ பால்பாயிண்ட் பேனா யாரால் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?

1937-ஆம் ஆண்டு, ஹங்கேரி நாட்டு லாஸ்லோ ஜோசப்பிரோ என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

★ இந்தியாவிலேயே எந்த மாநிலத்தில் முதல் முதலாகக் கூட்டுறவு நகர வங்கி ஆரம்பிக்கப் பட்டது?

தமிழ்நாட்டில்.

★ இந்தியாவில் எத்தனைத் தேசியப் பூங்காக்கள் உள்ளன?

47 பூங்காக்கள் உள்ளன.

★ பருத்தி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

சீனா.

★ கடலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

இந்தியா.

★ ரப்பர் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

மலேசியா.

கே. துரைதமிழ்ச்செல்வி,
ம. சந்தானம்,
அரசு ஆரம்பச் சுகாதார நிலையம்,
பழையனூர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்.

## செயற்கைக் கோளில் இந்தியாவின் சாதனை!

இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் 'ஆரியபட்டா' 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் விண்வெளியில் செலுத்தப்பட்டது. சுமார் 360 கிலோ கிராம் எடையே கொண்ட இந்தச் செயற்கைக் கோள் முன்னாள் சோவியத் யூனியன் ஏவுகணையிலிருந்து செலுத்தப்பட்டது.

செயற்கைக் கோள் தயாரிப்பில் மற்ற நாடுகளுடன் போட்டி போடும் அளவுக்கு இந்தியா வளர்ந்திருக்கிறது. நமது முதல் செயற்கைக் கோள் 'ஆரியபட்டா' விண்ணில் செலுத்தப்பட்ட இந்த குறுகிய காலத்திலேயே இந்தியா சொந்தமாகவே செயற்கைக் கோள் தயாரிக்கும் முயற்சியில ஈடுபட்டு வெற்றியும் கண்டிருக்கிறது.

இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் பலநோக்குத் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் 'இன்சாட்-2ஏ' ஜூலை மாதம் தென் அமெரிக்காவிலுள்ள பிரெஞ்ச் கயானாவிலிருந்து விண்வெளியில் செலுத்தப்படவிருக்கிறது. இந்தச் செயற்கைக் கோளின் மொத்த எடை 1.9 டன் ஆகும்.

வெறும் 360 கிலோ கிராம் எடை கொண்ட ஆரியபட்டாவிலிருந்து இன்று 1.9 டன் எடை உடைய இன்சாட்-2ஏ தயாரிப்பில் வெற்றி கண்டிருப்பது, இந்தியா விஞ்ஞானத்துறையில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பதையே காட்டுகிறது.

### இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட செயற்கைக் கோள்கள்:

ஆரியபட்டா - 360 கிலோ கிராம் - 1975 ஏப்ரல் மாதத்தில் சோவியத் யூனியனிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.

பாஸ்கரா-1 444 '' - 1979 ஜூன்
ரோகிணி - 35 '' - 1979 ஆகஸ்ட்
ரோகிணி - 35 '' - 1980 - ஜூலை
ரோகிணி - 32 '' - 1981 - மே
ஆப்பிள் (Apple) - 650 - 1981 - ஜூன்
பாஸ்கரா-11 - 436 '' - 1981 - நவம்பர்
ரோகிணி - 41.5 '' - 1983 - ஏப்ரல்
சிராஸ் (SROSS) - 150 (( 1987 - மார்ச்
IRS - 1A - 975 '' - 1988 - மார்ச்
SROSS - 150 '' - 1988 ஜூலை
IRS - 1B - 975 '' - 1991 - ஆகஸ்ட்
SROSS - 106 '' - 1992 - மே




## அனுபவ மொழிகள்

நாம் எவ்வளவு செய்யப் போகிறோம் என்பது அல்ல முக்கியமானது; எவ்வாறு செய்யப் போகிறோம் என்பதே முக்கியம். அதிகமாகச் செய்வதைக் காட்டிலும், செய்வதைத் திருந்தச் செய்வதே பெருமை.

- ரஸ்கின்

வளமான காலத்திலே நண்பர்கள் தெரிந்து கொள்வது நம்மை; வறுமைக் காலத்திலே நாம் தெரிந்து கொள்வது அவர்களை!

- இங்கர்சால்

## மிகச் சிறிய மாவட்டம்

நாட்டிலேயே மிகச் சிறிய மாவட்டமான தென் காரோ குன்றுகள், ஜூன் மாதம் 18-ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மாவட்டத் தில் மொத்த மக்கட் தொகை 62,354. இதன் தலைநகர் பெயர் பக்மாரா.

இந்த மாவட்டத்தில் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பில் 34 பேர் மட்டுமே வசித்து வரு கிறார்கள். மொத்தம் 539 கிராமங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளன.

## நவீன ரக ஹெலிகாப்டர்

தொழில்நுட்ப ரீதியில் மிகவும் முன்னேறிய இலகுரக ஹெலிகாப்டர் ஒன்று நமது நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகில் இத்தகைய ஹெலிகாப்டரைச் சொந்தமாக வடிவ மைத்துள்ள 2-வது நாடு என்ற பெருமையை இந்தியா பெறுகிறது. இதற்கு முன்பு இத்தகைய இலகுரக ஹெலிகாப்டரை வடிவமைத்த ஒரே நாடு அமெரிக்கா மட்டுமே.

இந்த ஹெலிகாப்டர் வடிவமைப்பின் மூலம் இந்தியா, விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றத் தில் எந்த வளர்ச்சி அடைந்த நாட்டுக்கும் குறைந் தது அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியிருக் கிறது.



# திருச்சி மாவட்ட ஏழை எளியோருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்களிடமிருந்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 22.6.1992 அன்று மக்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்றார்.

மனுக்கொடுத்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 546 நபர்களைத் தேர்ந்தெடுத்து 13.7.92 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். திருச்சியிலிருந்து அரசுச் செலவில் பேருந்துகளில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. பல்வேறு அரசுத் துறைகள் மூலமாகத் தையல் இயந்திரம் 5 பேர்களுக்கும், சலவைப்பெட்டி 20 பேர்களுக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் 45 நபர்களுக்கும், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கும், தமிழக அரசு கலப்புத் திருமணத் திட்டத்தின் கீழ் 10 பேர்களுக்கும், கண்பார்வையற்றோர் திருமண உதவித் திட்டத்தின்கீழ் ஒருவருக்கும், தாட்கோவின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு 2 டிராக்டர்கள், 2 மினி வேன்கள், 3 லாரிகள், 2 சுற்றுலாச் சீருந்துகள் ஆகியவையும், நகர்ப்புற வேலைவாய்ப்புக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் 10 நபர்களுக்கும், முதியோர் உதவித் தொகை 50 நபர்களுக்கும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 253 பேர்களுக்கு ரூ.2,500 முதல் ரூ.12,500 வரை ரூபாய் 13 இலட்சத்து 8 ஆயிரத்து 944 மானியத்துடன் இணைந்த கடனும், நிலப்பட்டா 5 நபர்களுக்கும், வீட்டு மனைப்பட்டா 50 நபர்களுக்கும், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான் 5 நபர்களுக்கும், முடநீக்கியல் சாதனம் 10 நபர்களுக்கும், பெட்டிக்கடை வைக்க நிதி உதவி 10 நபர்களுக்கும், மூன்று சக்கர சைக்கிள் 5 நபர்களுக்கும், செயற்கை வைரம் பட்டைத் தீட்டும் இயந்திரம் 10 நபர்களுக்கும், ஸ்டெபிலைசர் டூல்ஸ் கிட் 10 நபர்களுக்கும், பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகங்கள் 28 பள்ளி மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்பட்டன.

மொத்தம் 546 நபர்களுக்கு ரூபாய் 50 இலட்சம் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். நலத்திட்ட உதவிகள் பெற்ற 546 நபர்களில் 368 பேர் பெண்களாவர். நலத்திட்ட உதவிகள் பெற வந்த 4 தாய்மார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தங்களுடைய குழந்தைகளுக்குப் பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4 பெண் குழந்தைகளுக்குத் தனலட்சுமி, விஜயலட்சுமி, ராஜலட்சுமி, மகாலட்சுமி எனப் பெயர் சூட்டினார்.

பதினாறு வருடங்கட்கு முன் நடந்த சம்பவம். நான் மூன்று வயதுக் குழந்தையாயிருந்தேன். என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர் பரம ஏழைகள். அவர்களுக்கு நான் ஒரே பிள்ளை, ஆம்; என் வாழ்விலேயே பெருத்த மாறுதல் ஏற்படும் நாள், என் தாய் என்னைக் கையில் பிடித்த வண்ணம் தான் வேலை பார்க்கும் எஜமானின் வீட்டிற்குள் நுழைந்தாள். 'இந்தப் பையன்தான் அம்மா' என்று என்னை அவ்வீட்டு எஜமானனிடம் காட்டிக் கூறினாள்.

''பெயர் என்ன?'' என்று கேட்டாள் அந்த அம்மாள்.

''சுந்தரம்'' என்றாள் என் தாய். உள்ளே சென்று சில நிமிடங்கட்கெல்லாம் எஜமானி திரும்பி வந்தாள். கையில் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள் வைத்திருந்தாள். அதை என் தாயிடம் கொடுத்து என்னைக் கையில் பிடித்துக் கொண்டாள். என் தாய் ''அம்மா உங்க பிள்ளை மாதிரி வச்சுக்கணும்'' என்று கூறி என்னைப் பார்த்து அழுதாள்.

எஜமானி, ''ஏண்டி! உன் பிள்ளை வேறு என் பிள்ளை வேறா? இவனை நான் கடுமையா நடத்துவேன்னு நினைக்கிறியா?'' என்றாள்.

''அம்மா உங்க குணம் எனக்குத் தெரியாதா? பிறந்தா நல்ல இடத்திலே பிறக்கணும் இல்லேன்னாப் பிறக்கப்படாது. பிறந்து மூணு வருஷம் வரை வளர்த்து விட்டுப் பிரியறதுன்னா எந்தத் தாய்க்குத் தான் மனது சம்மதிக்கும்? உலகத்திலே எத்தனைப் பேர் பெரிய பெரிய பணக்காரங்கள்லாம் பிள்ளையில்லாமத் தவிக்கிறாங்க; பெத்தும் பெறாதவளாப் போகணும்னு இருக்கேம்மா - விதி' என்றாள்.

என் பக்கம் திரும்பி, ''சுந்தர் இவங்கதாம்பா இனி உனக்கு அம்மா! சொல்றபடி ஒழுங்காக் கேட்டுக்கிட்டு இருப்பா'' என்று அன்போடு அணைத்து முத்தமிட்டு விட்டு, பெரிய பாரத்தை இறக்கி வைத்து விட்டவள் போல் வெளியே சென்றாள்.

இரண்டு ஆண்டுகள் சென்றன; நான் அவர்களை அப்பா, அம்மா என்றே அழைத்து வந்தேன். அம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. நான் வந்த அதிர்ஷ்டம் தான் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள். குழந்தை ரேவதி நட்சத்திரத்திலே பிறந்ததால் ரேவதி என்றே பெயரிட்டனர். ஆறு வயதில் என்னைப் பள்ளியில் சேர்த்தார்கள். பெற்றவர்களைப் பற்றிய எண்ணம் சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. கஷ்டம் என்பதே தெரியாமல் வளர்ந்து வந்தேன். நான் முதலாவது பாரம் படிக்கும்போது ரேவதியையும் பள்ளியில் சேர்த்தார்கள். ஒரு நாள் எங்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைத்திருந்தார்கள். போய் விட்டுத் திரும்பி வந்தேன். என் அறையில் ரேவதி யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன். சுமார் பத்து வயதிருக்கும். ஒரு பெண் - நல்ல சிவப்பு என்று சொல்லிவிட முடியாது.



மூக்கும் முழியுமாய்ப் பார்ப்பதற்கு அழகாயிருந்தாள்.

''யார் ரேவதி அது?'' என்றேன்.

''கமலி அண்ணா! கல்கத்தாவிலுள்ள அத்தையின் மகள்.''

''ஊஹூம்'' என்று சொல்லிவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். பக்கத்து அறையில் அம்மா யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். ரேவதியிடமிருந்து அவர்தான் அத்தை என்று தெரிந்து கொண்டேன். அம்மா பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதிலிருந்து தான் முற்கூறிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். சில நாட்களுக்குப் பிறகு அத்தை மாமா எல்லோரும் கல்கத்தாவுக்குப் போய் விட்டார்கள். கமலியும் போய் விட்டாள்.

நான் காலேஜில் இண்டர்மீடியட் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு

# அநாதை!

-கவியரசர் கண்ணதாசன்



நாள் மாலை வேளை நானும் நண்பன் வாசுவும் பேசிக் கொண்டிருந்தோம். வாசு சொன்னான் ''சுந்தரம் நீ கேசவன் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவன் பெரிய குடிகாரன். உன் அப்பாவோடு கூட ஒரு நாள் சண்டை போட்டு விட்டான்.''

அன்று முதல் நான் கேசவனோடு அதிகம் பேசுவதில்லை. ஒரு நாள் பள்ளி முடிந்து வெளியே வந்தேன். கேசவன் வந்தான். ''சுந்தரம் வா கிளப்புக்கு போய் விட்டுப் போகலாம்'' என்று கூப்பிட்டான். தட்ட முடியவில்லை. போக மனமில்லாமல் போனேன். ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தோம்.

''இரண்டு கிளாஸ் ஒயின்!'' என்று உத்தரவிட்டான்.

''என்ன கேசவா! இது ஹோட்டல் என்று சொன்னாய்?''

'ஆமாப்பா, ஆமாம்! இது ஹோட்டல் தான். பிராண்டி ஹோட்டல். இன்று ஒரு நாள் சாப்பிட்டுத்தான் பாரேன்'' என்றான் கேசவன்.

''அப்படியானால் நான் போகிறேன்'' என்று எழுந்தேன்.

''வாட்ச்மேன்! இவனைப் பிடித்து வெளியே தள்ளு'' என்று உத்தரவிட்டான்.

காவல்காரன் என்னைப் பிடித்துத் தள்ளினான். தடுக்கி விழுந்தேன். முழங்காலில் சரியான காயம். ஆயினும் பெரிய கண்டத்திலிருந்து தப்பியது போன்ற உணர்ச்சி, கடமையைச் செய்து விட்டதில், சந்தோஷம். வேகமாக நடந்தேன். கேட்டைத் தாண்டும் போது திருடனைப் போல் அங்குமிங்கும் பார்த்தேன் நான் குற்றவாளியல்ல. ஆயினும் உண்மையறியா உலகத்தின் முன் நான் குற்றவாளிதானே? நான் சந்தேகப்பட்டது போல் என் தந்தை அந்த வழியே போனார். அது தான் காலேஜிலிருந்து வீட்டிற்குப் போகும் வழி. என்னைப் பார்த்துவிட்டார். கோபத்தோடு முகத்தைத் திருப்பிக் கொண்டு வேகமாக நடந்தார். நானும் வேகமாக ஓடி, ''அப்பா'' என்றேன். ஒன்றும் பதில் இல்லை. மறுபடியும் ''அப்பா!'' என்றேன், நான் களங்க மற்றவன். என்பதைக் கூற '' சீ...சீ...சீ...'' என்று சொல்லி

விட்டு வேகமாக நடந்தார். நான் நடையைச் சிறிது தளர்த்திக் கொண்டேன். ஏதோ ஓர் எண்ணம் தோன்ற வாசுவைத் தேடிச் சென்றேன். வாசு வெளியே போய் விட்டதாகச் செய்தி கிடைத்தது. மெதுவாக வீட்டை நோக்கி நடந்தேன். வீட்டின் அருகில் வந்ததும் நின்று உற்றுக் கேட்டேன். வாசு என்னைத் தேடி வந்தவன் அப்பாவோடு பேசிக் கொண்டிருந்தான்.

''மடப்பயல்! என்ன சொல்லியும் தெரியவில்லை. அந்தத் தடியனோடு சேர்ந்து குடிக்கக் கூடக் கற்றுக் கொண்டு விட்டான். நாயைத் தூக்கி நடு வீட்டில் வைத்தால்?'' இது அப்பாவின் குரல்.

வாசு ''இருக்காதே சார்! சுந்தரம் ஒரு நாளும் அந்த வேலைக்குப் போக மாட்டானே,''

''நான் கண்ணால் பார்த்தது பொய்யா?''

எனக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''நாயைத் தூக்கி...'' என்று எனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டேன். ஒரு சிறு அமைதி. வாசு அப்பாவின் சந்தேகத்தைச் சிறிது தணித்திருக்கிறான். ஆனால் பூராவும் தணிவதற்குச் சாத்தியம் இல்லையே? மீண்டும் துக்கம். கண்களைத் துடைத்துக் கொண்டு அவர்கள் இருந்த அறைக்குள் நுழைந்தேன். தந்தையின் கோபம் என்னைக் கண்டதும் எல்லை கடந்தது.

''சீ நாயே; திரும்ப என் முகத்திலே விழிக்கிறதுக்கு உனக்கு வெட்கமில்லே? போடா வெளியே பிச்சைக்காரப் பயலே!'' என்று கையை ஓங்கிக் கொண்டு வந்தார். வாசு என் தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு, ''நீ ரூமிற்குப் போ சுந்தரம்'' என்றான். நான் அழுது கொண்டே அறைக்கு வந்து நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் விம்மி விம்மி அழுதேன்.

எழுதிய காகிதங்களை இழுப்பறைக்குள் வைத்து விட்டு மேஜையின்மேல் படுத்தவன் அயர்ந்து தூங்கி விட்டேன். ரேவதி வந்தாள். ''அண்ணா!'' என்றாள். கண் விழித்தேன். அவள் குரலில் ஒலித்த

**1943-44 வாக்கில் கவியரசர் கண்ணதாசனின் தொடக்க காலப் படைப்புகளில் ஒன்று 'அனாதை'. இக்கதை இதுவரை எந்தத் தொகுப்பிலும் சேரவில்லை.**

**கண்ணதாசன் தம் இளம் வயதில் ஜீவா நாரணதுரைக் கண்ணன் அவர்களோடு நல்ல தொடர்பு கொண்டிருந்தார். ஒரு கட்டுரையில் '(1946) ஜீவாவைத் தேடி தூளைமேடு சௌராஷ்டிரா நகருக்கு நடந்து சென்றேன்' என்று எழுதியுள்ளார்.**

**இக்கதை ஜீவா நாரண துரைக்கண்ணன் நடத்திய 'பிரசண்ட விகடன்' இதழில் மே 15, 1946-இல் வெளிவந்துள்ளது.**

**- தி.வ. மெய்கண்டார்.**

சகோதரபாசம் என் துக்கத்தைச் சிறிது குறைத்தது.

''ஒன்றுமில்லை ரேவதி'' என்று சொல்லிவிட்டு முகத்தைக் கழுவி விட்டுவந்தேன்,

'' அம்மா எங்கே ரேவதி?'' என்று கேட்டேன்.

'' நேற்று மழையில் நனைந்ததனால் சிறிது ஜுரம் அடிக்கிறது. ஹாலில் படுத்திருக்கிறாள். நான் தான் இன்று சமையல் செய்தேன் என்றாள். வேகமாக ஓடினேன் அம்மா அறைக்குள்''அப்பா-அம்மா'' என்று முனகிக் கொண்டிருந்தாள்.

''அம்மா!'' என்றேன்.

''சுந்தரம்.... சாப்பிட்டாயா? என்றாள்.

''நான் சாப்பிடுகிறேன் அம்மா, நீ காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லையாமே? ரேவதியைக் கஞ்சி காய்ச்சிக் கொண்டு வரச் சொல்கிறேன். சாப்பிடுகிறாயா?''

''வேண்டாமப்பா! வாயெல்லாம் கசக்கிறது. சிறிது நேரம் கழித்துச் சாப்பிடுகிறேன். நீ போய்ச் சாப்பிடு.''

தொடர்ந்து வரும் துன்பங்களை எண்ணி எண்ணி நலிந்து கொண்டிருந்த உள்ளத்திற்குச் சாப்பாடு வேப்பங்காயாக இருந்தது... ''சரி!'' என்று சொல்லி விட்டு வெளியே வந்தேன். வாசு, கேசவனிடம் விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளப் போய் விட்டான்.

அன்று இரவு அம்மாவுக்கு உடம்பு சிறிது அதிகமாக இருந்தது. நான் டாக்டரை அழைத்து வந்தேன். அவர்வந்து பார்த்துவிட்டு மருந்து கொடுத்தார். ''நிமோனியா ஜுரம். ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நான் நாளைக் காலையில் வருகிறேன்.'' என்று சொல்லி விட்டுப் போனார். இரவு முழுவதும் பயத்துடனே கழிந்தது. காலை சுமார் ஐந்து மணிக்கு அம்மா ஏதோ பிதற்றினாள். நான் இதே நினைவாகப் படுத்திருந்தவன் சிறிது நேரம் சப்தம் கேட்டதும் விழித்துக் கொண்டேன். எழுந்து 'ஸ்விட்'சைப் போட்டேன். அவள் முகம் பார்வைக்கு விகாரமாயிருந்தது. ஏதோ சொல்ல வாயெடுத்தாள். வெறித்து வெறித்துப் பார்த்தாள். ரேவதியை எழுப்பினேன். ரேவதி விஷயம் புரியாமல் கத்தினாள். அப்பா ஓடி வந்தார். ஆனால் அதற்குள் அன்னை விடை பெற்றுக்கொண்டாள்!

விதியின் விசித்திர விளையாட்டில் இன்பமே துன்பமாக

மாறும் பொழுது, துன்பத்தைத் தொடர்ந்து துன்பம் வருவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது.

மறுநாட் காலை உறவினர்களுக்குக் கடிதங்கள் பறந்தன.

ஒருநாள் காலை வாசலில் ஒரு 'டாக்ஸி' வந்து நின்றது. அதிலிருந்து அத்தை, மாமா, கமலி எல்லோரும் வந்து இறங்கினர். அத்தை மிகவும் வருந்தினாள்.

பத்து நாளுக்கு பிறகு ஒருநாள் என் கல்யாண விஷயமாகப் பூரண சம்மதம் என்று சொல்லி விட்டார். ஆனால் அத்தை மட்டும் சம்மதிக்கவில்லை.

''எத்தனையோ நல்ல பையன்களையெல்லாம் விட்டு விட்டு எங்கேயோ கிடந்த பிச்சைக்காரப் பயலுக்குப் பெண்ணைக் கொடுக்கச் சொல்கிறாயே அண்ணா?'' என்றாள் எனக்குக் கேட்கும்படியாக, அதற்காக எனக்கு வருத்தமே ஏற்படவில்லை. ''துக்கம் அதிகமாகும் போது அழத்தோன்றாது'' என்ற பெரியாரின் மொழி ஞாபகத்துக்கு வந்தது, நாற்காலியில் உட்கார்ந்து சிந்தனையைச் செல்லவிட்டுக் கொண்டிருந்தேன். அறைக் கதவு திறக்கப்பட்டதைக் கூடக் கவனிக்கவில்லை.

''அத்தான்!'' என்று ஒரு குரல் கேட்டுத் திடுக்கிட்டேன்.

''யாரைக் கூப்பிடுகிறாய்?'' நான் பிச்சைக் காரப் பயல் அல்லவா? எங்கேயோ கிடந்த பிச்சைக்காரப் பயலை உரிமை கொண்டாடுகிறாயே?'' என்றேன்.

''அத்தான்!'' என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தாள். ''அத்தான்! அம்மா உங்களைப் பிச்சைக்காரன் என்றாள். நான் கொள்ளைக்காரன் என்கிறேன்''

''சொல்லம்மா, சொல். என் பிறப்பின் ரகசியமே அதுதானே?''

தனக்குத்தான் சொந்தமானவன் என்று நினைத்தவள் போல இடது கையைத் தோளில்வைத்து வலது கையால் முகத்தை நிமிர்த்திய வண்ணம் ''அத்தான்!'' என்றாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. 'கமலம்' என்று சொல்லிக் கொண்டே எழுந்தேன் என் துக்கமெல்லாம் எங்கோ பறந்து போய்விட்டது. அவள் முகத்தோடு என் முகத்தைச் சேர்க்கப் போகும் சமயம், அத்தையும் சம்மதித்து விட்டாள் என்பதைத் தெரிவிக்க ரேவதி ''அண்ணா!'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்தாள்.

''இதேதடா பூஜை வேளையில் கரடி புகுந்தது போல'' என்று நினைத்துக் கொண்டு 'என்ன சனியனே! என்ன வேண்டும்?'' என்றேன்.

''சனியனுக்குத் தானே! பிடித்துக் கொள்ள ஓர் அரசமரம் வேண்டும்'' என்றாள்.

''அதோ!'' என்று அப்பொழுது தான் வந்து கொண்டிருந்த வாசுவைச் சுட்டிக் காட்டினேன்.

''போ! அண்ணா!'' என்று கூறிவிட்டு ஓடி மறைந்தாள் ரேவதி.

நானும் வாசுவும் சிரித்தோம். கமலியும் சிரித்தாள். அன்னையின் படத்தில் செருகியிருந்த பூவும் சிரித்தது.

—'இளந்தமிழன்' இதழிலிருந்து.



சென்னையில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 448 குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிதி உதவியும், தலா 5 கிலோ அரிசி, சேலை, வேட்டி ஆகியவைகளும் வழங்கினார் (13.7.1992).



# கோவை மாவட்டம்

# வளர்ச்சிப் பணிகள்!

கொங்கு மண்டலம் என்றும் கொங்கு நாடு என்றும் பழங்காலத்தில் கூறப்பட்ட கோவை மாவட்டம் தற்பொழுது பெரியார், நீலகிரி, கோவை என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெறுகின்றது.

காடுகளை அழித்து தோட்டங்களை உண்டாக்கி வேளாண்மையில் ஈடுபட்ட கொங்கு நாட்டு மக்கள், வேளாண்மைக்கு நீர் ஆதாரம் குறைந்தபொழுது, நீருக்காக ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டி அதன் மூலம் கிணற்றுப் பாசனத்தைப் பெருக்கினார்கள். உழைக்கும் ஆர்வம் கொண்ட கொங்கு மண்டல மக்கள் கிணற்று நீரை மேலே கொண்டு வர மின்மோட்டார் மற்றும் பம்ப்செட்டுகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். அதனால் அதன் உபயோகம் அதிக அளவில் பெருகி, மின் மோட்டார் பம்ப்செட்டுகள் தயாரிப்பதிலும் ஈடுபட்டனர். அதன் மூலம் இப்பகுதியில் தொழில் வளர ஆரம்பித்தது.

கொங்கு மண்டலத்தின் கலசமாக விளங்குகின்ற கோவை மாவட்டம், நல்ல தட்பவெப்ப நிலையைக் கொண்டு விளங்குவதால் பருத்தி உற்பத்தியும், பருத்தி நூல் உற்பத்தித் தொழிலகங்களும் உருவாகின. இதனால் நூற்பாலைகளுக்குத் தேவையான எந்திரங்கள், உபரிப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களும் பெருக ஆரம்பித்தன.

தமிழக அரசு மக்களின் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், பல்வேறு திட்டங்களையும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் வறுமையை ஒழிக்கவும், கிராம வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக நல்லபல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஆண்டுக்கு 710.90 மி.மீ. மழை பெய்ய வேண்டிய கோவை மாவட்டத்தில் 553.64 மி.மீ. மழையே கடந்த ஆண்டு பெய்துள்ளது. இது (-) 22.12 சதவிகிதக் குறைந்த மழையாகும். இதனால் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை மற்றும் வறட்சியைப் போக்க, தமிழ அரசு முதல் கட்டமாக ரூ.97 இலட்சம் ஒதுக்கி 200 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க உத்தரவிட்டது. இதில் 130 ஆழ்குழாய்க் கிணறுகள் கிராமப் பகுதிக்கும், 70 ஆழ்குழாய்க் கிணறுகள் நகர்ப் பகுதிக்கும் ஒதுக்கப்பட்டு மொத்தம் 196 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மக்களின் பயனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, தமிழக அரசு கோவை மாவட்டத்திற்கு ரூ.24 இலட்சத்தை ஒதுக்கி குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் கிராமப் பகுதிகளுக்கு மேலும் 32 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, இன்னும் ஒரு சில நாட்களில் முடிவடைந்து அவற்றை மக்கள் பயன்படுத்துவார்கள். மேலும் 80 ஆழ்குழாய்க் கிணறுகள் புதுப்பிக்க ரூ.29.60 இலட்சமும் ஒதுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பல்லடம், திருப்பூர், பொங்கலூர்

பகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டும், தண்ணீர் கிடைக்காத பகுதிகளில் 39-க்கும் மேற்பட்ட லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது.

கோவை மாநகரைப் பொறுத்த வரை குடிநீர் வழங்குவது சிறுவாணி அணையாகும். நாம் எதிர்பார்த்த தென்மேற்குப் பருவ மழை பெய் யாமல் தாமதமாகி வருவதால் அணையில் நீர்மட்டம் உயரவில்லை. தற்பொழுது நீரின் அளவு 866.67 மீட்டர் ஆகும். இதில் குறைந்த பட்சம் 863.40 மீட்டர் வரையில் தான் அணையிலிருந்து நீர் எடுக் கலாம். அணையின் அதிக பட்ச நீர் அளவு 878.50 மீட்டர் ஆகும்.

கடந்த ஏழு ஆண்டுகளை விட இன்றைய நிலையில் இவ்வாண்டு தான் சிறுவாணி நீர் அளவு மிகக் குறைவாக உள்ளது. வழக்கமாக இதற்கு முத்திக்குளம், பட்டியாறு ஆறு, பம்பாறு, ஆணைக்கொரை யாறு ஆகிய அருவிகளிலிருந்து நீர் வரும். இவ்வாண்டு இதன் மூலம் நீர் வரவில்லை. இப்போதுள்ள நீரின் அளவைக் கொண்டு இனிமேல் கோவை மாநகராட்சிப் பகுதிக்கு 51 எம்.எல்.டி. நீரும், சுற்றுப்புறப் பகுதிக்கு 9 எம்.எல்.டி. நீரும் 14.6.92 முதல் ஒருநாள் விட்டு ஒருநாள் மட்டும் பகுதி வாரியாகக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பருவமழை தவறியுள்ள இந்த இக்கட்டான நேரத்தில் இருக்கின்ற நீரின் அளவைக் கருத்தில் கொண்டு, நீரை வீணாக்காமல் அத்தியாவசியத் தேவைக்கு மட்டும் சிக்கனமாகப் பயன்படுத்தும்படிக் கேட்டுக் கொள் வதோடு, முறைகேடாகச் சிறுவாணி நீரை நேரடியாக எடுப்பது, தோட்டத் திற்குப் பாய்ச்சுவது போன்றவை களைப் பறக்கும் படையினர் கண் காணித்து நடவடிக்கை மேற்கொள் வார்கள்.

இந்தியாவிலேயே 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முதலிடமும், தமிழகத்தில் கோவை மாவட்டம் முதலிடமும் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் 100 சதவிகிதத்திற்கு மேல் நிறைவேற்றி கோவை மாவட்டம் சாதனை படைத் துள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 117 சதவிகித



★ நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும் தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

- பெருந்தலைவர் காமராசர்.

மும், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 123 சதவிகிதமும் பெற்றுள் ளது குறிப்பிடத்தக்கதாகும். இதற் காக இந்த ஆண்டு தமிழக அரசு ரூ.4 இலட்சத்தை கோவைக்குப் பரி சாக வழங்கியுள்ளது. மேலும் தமிழகத்திலேயே இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் சாதனை படைத் ததற்காகவும், முதலிடம் பெற்றதற் காகவும் சுழற் கோப்பையைத் தமிழக அரசிடம் பெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சிறுசேமிப்பை எடுத்துக் கொண் டால் கடந்த ஆண்டு 1991-92-இல் இலக்கான ரூ.49 கோடியை மிஞ்சி ரூ.52.64 கோடியைக் கோவை மாவட்டம் வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. இது 106 சதவிகிதம் ஆகும். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிப் பரிசும் வழங்கியுள் ளார்கள். அதேபோல் இந்த ஆண் டிற்குக் கொடுக்கப்பட்டுள்ள ரூ.50 கோடி இலக்கைப் பொதுமக்கள் ஆதரவோடு கோவை மாவட்டம் எளிதில் அடையும் என்பதில் சந்தேக மில்லை. சிறுசேமிப்பில் சிறந்த சாதனை படைத்ததற்காக, கோவை மாவட்டத்திற்கு ஊக்கத் தொகை யாக ரூ.75 இலட்சம் தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்தொகையைப் பயன்படுத்தி கோவை மாவட்ட நிர் வாகம் திருமூர்த்தி அணை சுற்றுலா வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக ரூ.5 இலட்சமும், பொள்ளாச்சியில் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு ரூ.6 இலட்சமும், திருப்பூர், பல்லடம் பகுதியில் குடி நீர்க் குழாய் விரிவாக்கம் மற்றும் ஆழப்படுத்த ரூ.3.25 இலட்சமும், அண்மையில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு தினத்தன்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் களால் தொடங்கி வைக்கப்பட்ட ராஜீவ் காந்தி நகருக்குச் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு ரூ.3 இலட்சமும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.11 இலட்சமும் ஒதுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இத்தொகை மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களுக்குச் செலவழிக்கப்பட்டு வருகின்றது.

அரசு பதவியேற்றதும் கிராம மக்கள் நலம் பேணுகின்ற வகையில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் அறிவிக்கப்பட்டு ஆண்டுக்கு ரூபாய் ஒரு கோடி ஊராட்சி ஒன்றியங் களுக்கு ஒதுக்கப்பட்டு இதன்மூலம் கோவை மாவட்டத்தில் 21 ஊராட்சி ஒன்றியங்களிலும் கிராமச் சாலைகள், தார்ச்சாலை, பள்ளிக் கட்டடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத் துணவுக் கூடங்கள், கிராமக் குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சிறுபாசனக் குளங்கள் பராமரிப்பு போன்றவைகளுக்காகச் செயல்படுத் தப்படுகின்றது.

கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் போதிய மருத்துவ வசதிகள் பெறாமல் இருப்பதைக் கண்டு புதிய அரசு பதவியேற்றதும், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்' நல்ல நோக்கத்தோடு தமிழகம் தழுவிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட் டத்தின் மூலம் அனைத்து கிராம மக்களும் மருத்துவப் பரிசோதனை வசதி பெற்று வருகிறார்கள். தொடர் மருத்துவ வசதியும் செய்யப் படுகின்றது. கோவை மாவட்டத்தில் 461 முகாம்கள் இதுவரை நடத்தப் பட்டு, அதன் மூலம் 2 இலட்சத்து 32 ஆயிரத்து 351 பேர் பயனடைந் துள்ளனர்.

தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண் டால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் துறையில், தொழில் வளர்ச்சியில் இந்தியா விலேயே தமிழகத்தை முதலிடத்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 368 பெண்கள் உட்பட 546 பேருக்கு ரூ.50 இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 13.7.92 அன்று சென்னையில் வழங்கினார்.



திற்குக் கொண்டு வரும் சீரிய முயற்சிக்கு ஆதரவாக, முன்னோடியாக, தொழில் புரட்சிக்கே வழி காட்டும் மாவட்டமாகத் திகழ்கிறது என்றே கூறலாம்.

தொழில்களைப் பெருமளவு தொடங்கி, .வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் முகமாக பொள்ளாச்சி, வால்பாறை, பல்லடம் வட்டங்கள் தொழிலில் பின்தங்கியவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்கு தொடங்கும் தொழில்களுக்கு நிலையாக முதலீட்டின் 15 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. பின்னலாடை ஏற்றுமதி செய்யும் தொழில் முதலியவைகளைத் தனியாகத் தொடங்க திருப்பூர் அருகில் முதலிபாளையத்தில் 86.65 ஏக்கர் நிலப் பரப்பில் திருப்பூர் பனியன் ஏற்றுமதியாளர்கள் சங்கம் சார்பாக முதல் கட்டமாக 157 தொழிற்கூடங்கள் கொண்ட தொழிற்பேட்டைக்கு, சிட்கோ மூலமாக அரசின் சலுகைகள் பெற்றுத்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திருப்பூர், பனியன் ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு ரூ.1000 கோடி அளவில் நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கின்றது. முதலிபாளையத்தில் தொடங்கப்பட்டுள்ள பனியன் தொழிற்பேட்டை மூலம் மேலும் அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கோவை மாவட்டத்தில் சுமார் 17,000 சிறுதொழில்கள் நிறுவனமும், 140 நடுத்தர, பெருந் தொழில்களும் இயங்கி வருகின்றன. 1991/92-ஆம் ஆண்டு 850 புதிய சிறுதொழில்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 8,300 தற்காலிகச் சான்றிதழ்கள் அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் தொழில் துறையில் தமிழகத்தின் பெருமையிலும், வளர்ச்சியிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதைப் போல இப்பொழுது சுற்றுலாத் துறையில் வேகமாக முன்னேறி ஒரு சுற்றுலாத் தலமாக வளர்ச்சி பெற்று வருகிறது. கோவை வளர்ச்சிக்காக சுற்றுலா, நடப்பாண்டில் கோவை மாவட்ட நிர்வாகம் சிறுசேமிப்புச் சாதனையின் பொருட்டு வழங்கப்பட்ட பரிசுத் தொகையிலிருந்து ரூ.3 இலட்சம் ஒதுக்கி, பல்வேறு விதமாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

கோவை மாவட்ட நிர்வாகத்தின் சீரிய முயற்சியால் இன்று சுற்றுலாத் தலமாக்கப்பட்டிருக்கும் பகுதி பொள்ளாச்சி அருகில் உள்ள திருமூர்த்தி அணையாகும். அணையின் அடிவாரத்தில் அமைந்துள்ள புகழ்மிக்க கோயில் மற்றும் அருவியை இணைக்க இரும்புப் பாலம் ஒன்று தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் காட்டாறு போல் ஏற்படும் வெள்ளத்தால் பலர் மரணம் அடைந்துள்ளனர். இந்த ஆபத்தைப் போக்க தற்பொழுது ரூ.5 இலட்சம் செலவில் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர உல்லாசப் பயணிகளுக்காக இந்த அணையில் 2 மோட்டார் படகுகளும் சமீபத்தில் விடப்பட்டுள்ளன. இதன் மூலம் தினசரி 200- லிருந்து 250 சுற்றுலாப் பயணிகள் பயனடைகின்றனர்.

தற்போது தனியார் நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புடன் படகுத் துறை (போட் அவுஸ்) ஒன்று வேகமாகக் கட்டப்பட்டு வருகிறது. மேலும், சிறுவர்களைக் கவரும் வகையில் முதலைப்பண்ணை ஒன்றும், மான் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும், பயணிகள் தங்குமிடம், உணவு விடுதிகள், பேருந்து நிற்குமிடம் அமைப்பது, காவல் நிலையம் அமைப்பது போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஜி.டி. மோகன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



**கோ-ஆப்டெக்ஸ்**

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23